உயிர்நிலைக்கலை

ஆசிரியர் :

வைத்தியமணி, சித. வே. ஷண்முகநாத பிள்ளை

இலக்கியப் பதிப்பகம்

காரைக்குடி.

வைத்திய சாஸ்திரம்

★

ஆசிரியர்

வைத்தியமணி சித. வே. ச.

★

நல் வாழ்வு வாழ வைத்திய
முறை இன்றியமையா
தது. வைத்தியத்திற்கு
வேண்டிய முக்கியமான
நிவாரணப் பொருள்
களை, முறையாகத்
தொகுத்துத்
தந்திருக்கி
ருர்கள்.

சிறந்த இந்நூல் எல்லோ
ரிடமும் இருக்க வேண்டு
வது அவசியமாகும்.

இதன் விலை ரூ. 1-4-0

இலக்கியப்பதிப்பகம்

காரைக்குடி.

உயிர் நிலைக்கலை

உயிர் நிலைக் கலை இலக்கணம்

என்னும்

மீனாமிர்தம்

★

ஆசிரியர்

"வைத்தியமணி" சித. வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை

இலக்கியப் பதிப்பகம்

காரைக்குடி

முதற் பதிப்பு 1947

விலை ரூபா ஒன்றரை

Printed at the South India Press, Karaikudi
for Ilakkiya Pathippaham, Karaikudi.

பதிப்புரை

மனிதன் ஆரோக்கிய வாழ்வை விரும்புகிறுன். உடல் திண்மை, மனவலு, அறிவுநுட்பம், அஞ்சாது அமைந்த உள்ளம் இவை படைத்த ஒருவன், அவன் பிறந்த நாட்டுக்கு - அந்நாட்டை வளர்க்கும் செல்வம் ஆவான். இச்செல்வம் பெருகி நாட்டின் நலிவைப் போக்குவதுதான் இன்றைய இந்தியாவின் தேவை.

ஆரோக்கிய வாழ்வு தன்னலமாக ஆரம்பித்து நாட்டின் உயிர் நிலேயாக அமைகிறது. ஒவ்வொருவரும் ஆரோக்கியமாக வாழ்வது — வாழும்வகை தெரிவது அவசியமாகும்.

வைத்தியமணி சித. வே. சண்முகநாத பிள்ளே அவர்கள் நாட்டு மக்களுக்கே நலந்தருவதாகிய "உயிர் நிலேக் கலே இலக்கணம்" (மீனுமிர்தம்) என்னும் வைத்திய நூலே ஆராய்ந்து தெளிந்து இயற்றித் தந்திருக்கிறுர்கள். அவர்கட்கு நன்றி செலுத்துவது நம் கடன்.

தமிழுக்கு தொல்காப்பியம் எவ்வாறு தாய் நூலாக கருதப்படுகின்றதோ அது போன்று இந்நூல் வைத்திய உலகுக்கு மட்டுமன்றி ஏனேயோருக்கும் நல்ல பயனளிக்கும் தாய் நூலாகும். இதனேத் தமிழ்த்தாயின் மலரடிகளில் வைத்து வணங்குகிறேம்.

நிர்வாகி

காரைக்குடி
10—9—47

புதுவயல் - சோழையா
இலக்கியப் பதிப்பகம்

SIDDHA VAIDYA SANGAM

(Established 1927 & Registered under the Society's Act)

Office:—**Aruppukkottai Road, Madura.**

சித்த வைத்திய சங்கம்

(ரிஜிஸ்டர்டு)

அருப்புக்கோட்டை ரோடு, 13-10-1946.

மதுரை.

கலியுக-௵ 5047-க்கு விய-௵ புரட்டாசி-௴ 25உ மதுரை சித்த இந்திய வைத்திய இரண்டாவது மகாநாடு சென்னை அரசாங்க இந்திய மெடிசன் போர்டு மாஜிமெம்பர் வைத்தியபூபதி உயர்திரு ஜி. கண்ணுசாமி பிள்ளையவர்கள் தலைவராகவும், இராமநாதபுரம் ஜில்லா கோர்ட்டு நீதிபதி ஸ்ரீமான் பி. ராமகிருஷ்ண ஐயர் எம். ஏ. ஐ. சி. எஸ். அவர்கள் திறப்பாளராகவும் மதுரை அன்னக்குழி மண்டபத்தில் நடைபெற்றபோது, அகில திருவிதாங்கூர் சித்த வைத்திய சங்கத்தலைவர் திரு. நித்தியானந்த சுவாமிகள், திருநெல்வேலி திரு. தளவாய் திருமலையப்ப முதலியார், எல். ஐ. எம். அவர்கள், சித்து நூலாராய்ச்சியாளர் நாகை து. சிவப்பிரகாசம் பிள்ளை, ஆர். ஐ. எம். பி. அவர்கள், இன்னும் பல மருத்துவக்கலை வல்லவர்கள் முன்னிலையில், சண்முகானந்த சித்த வைத்தியசாலைச் சித்தவைத்தியர் தேவகோட்டை சித. வே. சண்முகநாத பிள்ளையவர்களால் ஆக்கப்பெற்ற ரோகநிவாரணப் பொருள்த்தொகுதியென்னும் பதார்த்த குணவிளக்கத்தையும், மீனுமிர்தமென்னும் உயிர்நிலைக்கலை இலக்கணத்தையும் அரங்கேற்றலாயிற்று.

இவ்விருநூல்களையும் யாங்கள் நன்கு பரிசீலனை செய்தோம். இவைகள் சித்தவைத்திய நூல்கள் பலவற்றையாராய்ந்து மேன்மையான மருந்துகள் செய்யும் சித்தவைத்தியர்களுக்கும் சித்தவைத்தியப் பயிற்சியாளர்களுக்கும் சித்தவைத்தியக்கலை உயர் பறிபவர்களுக்கும் எளிதிற் பயன்தரும். உயர்நல முடையதாயும் சித்தவைத்தியர்களெல்லோருக்கும் பொதுவாக எல்லா மருத்துவக்கலைஞர்களுக்கும் சென்னை அரசாங்கத்தார் நடத்தும் இந்திய வைத்தியக் கல்லூரிகளுக்கும் உதவக்கூடியதாகவும் பொதுவாக பூத பௌதிக தத்துவ விஞ்ஞான ஆராய்ச்சியாளர்களுக்கும் பயன்தரத்தக்க சிறந்த நூல்களாகவும் இருக்கின்றன.

ஒப்பம்.

P. முத்துக்கருப்ப பிள்ளை R. I. M. P.
காரியதரிசி.

மதுரை.

N. B. வயிரவன் செட்டியார்
தலைவர்.

உள்ளுரை

		பக்கம்
1.	பாயிரம்	1
2.	உற்பத்திப் படலம்	10
3.	பெயர்ப் படலம்	19
4.	பண்புப் படலம்	36
5.	கற்பப் படலம்	37
6.	ஒடுக்கப் படலம்	51
7.	பரிபாஷை விளக்கம்	59
8.	அருமருந்துக் கோவை	68
9.	இந்துவர்ணமெழுகு (வான்மெழுகு)	68
10.	கெந்தகத் தைலம்	71
11.	அயச்சிந்தூரம்	72
12.	சாந்த சந்திரோதயக் குளிகை	75
13.	அகத்தியர் குழம்பு	75
14.	சொர்ணசார சிந்தூரம்	78

உ

சிவமயம்

தேவகோட்டை

தருமபுர ஆதீன வித்துவான்

"பாலகவி, வரகவி, உரைமணி"

வயிநாகரம். வே. இராமனுதன் செட்டியார்

அவர்கள் இயற்றிய

சாற்றுக்கவி.

உலகிடைப் பொருள்க ளுள்ளன வற்றை
யொன்பது வகையென வுணர்ந்தா
ரிலகிய தமிழி னிசைந்தபே ரறிஞ
ரிதனையாய்ந் தினிதுகைத் தலத்தா
மலகமதென்ன வரைந்தெமக் களித்தான்
வண்மைமீ ஞமுத மாகப்
பலகலை யறிவா லுயிர்நிலைக் கலையைப்
பற்றிய விலக்கணப் பொற்பே.

பொற்பினுக் கெல்லை யாயமா முருகன்
பொன்னடிக் கன்புறு புனித
னற்பக மன்னு மருத்துவ னறிஞ
னணிமிகு மோவியக் கலைஞன்
சொற்பழு துரையாத் தூயவ னென்பாற்
றொடர்ந்தபே ரன்பினன் வேற்பே
ருற்பவன் மைந்தன் சண்முக நாத
வுத்தம னுயர்குணத் தோனே.

தேவகோட்டை சைவப் பிரகாச வித்தியாசாலை
தலைமையாசிரியர்

அ. கணபதி ஐயா அவர்கள் இயற்றிய

சிறப்புப் பாயிரம்

★

கட்டளைக் கலித்துறை.

உருவு மருவமு மாகு மிருபொரு ளுண்மையெலாம்
மருளறு மெய்மனத் தார்க்கே வெளிப்படையாகு மன்றித்
திருவுடை யார்க்குந் தெரிக்கவொ ணுதித் திறமையினைப்
பொருளொடு நன்குணர்ந் தொன்பான் பகுப்பைப் புகன்
(றனரே.

புகன்ருர் மருத்துவ நன்னூற் ருெகுப்புப்பு வியிலுளோர்க்
ககன்ற பொருளெலாம் ஆய்ந்தாய்ந் தடக்கி யணுவுருவி
லிகலி லுயிர்நிலை நற்கலை யாகு மிலக்கண நூற்
றுகலில் சிறப்பொடி யாத்தனன் மாந்தர் துயரறவே.

அறமுணர் நெஞ்சத் தருளொடு நுண்புல மார்ந்துலகிற்
பெறலரு நற்குணத் தோடு கணியும் பிணிமருந்தும்
பிறகலை மற்றும் நனியுணர்ந் துண்மை பெறவிளங்குந்
திறமுறு சண்முகநாதனற் றேவைபிற் சிருறவே.

இந் நூலாசிரியர்

வைத்யமணி, சித. வே. சண்முகநாத பிள்ளை,

தேவகோட்டை.

உ

சிவமயம்

ஹரி ஓம்.

நன்றாக குருவாழ்க

குருவே துணை.

உயிர்நிலைக்கலை இலக்கணம் என்னும் மீனுமிர்தம்

பாயிரம்

காப்பு

இறைவணக்கம்

கட்டளைக் கலித்துறை

அகர முதலாய வைம்பத் தொருவகை யாஞ்சரமு
மிகவொளி யாகு மிரவி மதியு மிதனுறவு
மிகவரு மேழுமுண் டாக்கி யடக்கு மியல்புடைத்தாந்
தகவுறு மூலப் பொருளை நலமுறச் சாருவமே.

(உரை) (அகரமுதலாய.) மெய்க்குருவால் சரத்தை யறிந்து; அவர் உபதேசித்தபடியே நடத்தும்போது, வாசியானது, மேன்மூலந்தொட்டுக் கீழ்மூலம்வரை செல்லும் வடிவம், அகாரமாம், மேலும் அதுவே கீழ்மூலத்திலிருந்து உந்தி-மேன் மூலஞ்செல்லும்போது, உகார வடிவாம், பின்னர் பன்னிரண்டு அங்குலப்பிரமாண முள்ள அவ்வாசியானது, அமிதமாய் குண்டலிவிழிப்புறும்படி செல்லும்வடிவம், மகாரமாம். இப்படியாயபின் அதுவே ஓங்காரவடிவமாம் (ஐம்பத்தொருவகையாஞ் சரமும்.) அவ்வாசியானது கீழ்மூலந்தொடங்கியாறு தலத்திலும் மேன் மூலந்தொடங்கியாறு தலத்தினும் நடக்கும்போது

ஐம்பத்தொருவகையாம், அ.முதலாகிய அச்சரம், அவ்வச்சரமானது, உச்சுவாச நிச்சுவாசமாய் கீழ்மூலத்தொலிப்பதை தென்மொழி என்றும் மேன் மூலத்தொலிப்பதை வடமொழி என்றுஞ் சொல்லப்படும். அவ்வைம்பத்தொன்றின் விபரம் வருமாறு. *—இவ்வடையாளந்தென்மொழி ——இவ்வடையாளம். வடமொழியாகவுங்கொள்க. – இவ்வடையாளம். உயிரெழுத்து பொதுமொழி..... இது. இடைமொழி. (மிகவொளியாகு மிரவிமதியுமிதனுறவு மிகவரும் ஏழும்.) மிகுந்தஒளியாகிய. சூரியனென்னும் பின்கலையும். சந்திரனென்னும் இடைகலையும் இதன்சேர்க்கை ஏழுவகையாவன, உச்சபலத்துடன் சூரியனாகிய மனம். சந்திரனாகிய புத்தியை(மதியை)க்கூட துணிவென்னுஞ் செவ்வாயும். சுவாப பலத்துடன் சந்திரனாகிய புத்தி. சூரியனாகிய மனத்தைக்கூட நுட்பமென்னும். புதனும் சூரியனென்னும். மனத்தின் நீசமென்னும் குற்றமாகிய மறதியென்னுஞ் சனியும். அவ்வாறு சந்திரனென்னும். புத்தியின் நீசமென்னுங் குற்றமாகிய இராகு-என்னும் மயக்கமும். இவை உச்சபலத்துடன் கூட நூதனம் என்னும் குருவும் மறதியென்னுஞ்சனி மயக்கமென்னும் இராகுவைச் சுவாபபலத்துடன்கூட களிப்பு என்னும் சுக்கிரனும் இவற்றின் ஆதாரமாகிய உயிரென்னுங் கேதுவும் ஆம். (உண்டாக்கியடக்கும் இயல்பு உடைத்தாந்) தகவு (குணம்) உறுமூலப்பொருளை) குண்டலிசத்தி யென்னுங்கணபதியை-

---

* மூலம்-	(ச)	க. க்க. ங்க. ங்கெ
சுகவதிட்டானம்-	(சூ)	ச. ச்ச ச்ய. ச்யெ. ங. ஞ.
மனபூரகம்-	(ம)	ட. ட்ட ண்ட. ண்டே. த. த்த. ந்த. ந்தெ. ண. ந.
அனகதம்-	(மஉ)	ப. ப்ப. ம்ப. ம்பெ. ம.ய.ர.ல.வ.ழ.ள.ற.
விசுத்தி-	(மசூ)	அ. ஆ. இ. ஈ. உ. ஊ. ரு. ரூ. லு. லூ. ஏ. ஐ. ஓ. ஔ. அம். ஃ.
அகனல்-	(உ)	ன. எ.
அடங்கல்.	(க)	ஒ.

(நலம் உற்ச்சாருவமே)—கருத்துரை. அகரமுதலாய் எழுத்து அ. உ. ம. இவைகூட ஓம். மேன் மூலங் கீழ் மூலத்தில் தொடங்கியாறு தலத்தினும் நடக்கும் அச்சரம் ஐம்பத்தொன்றும். இரவியாதி ஒன்பது கோள் யென்னும் மனம், புத்தி, துணிவு, நுட்பம், மறதி, மயக்கம், புதுமை களிப்பு, ஞானம் இவைகளை யுண்டாக்கி யடக்கும் இயல்பு உள்ள, மூலாதாரப் பொருளாகிய, கணபதியைச் சாருவோம்.

குருவணக்கம்

சரத்தின் கணப்பொருளாய்ப்பின் கலையாந் தகரினுற்றுத்
திரமாய நந்தித் தலைவனைச் சார்ந்து திகழுபயச்
சரவேலை வாங்கி மயிலெனும் வாசி தனிலிவர்ந்து
சுரரா மகக்க ருவிநா யகனுய்த் தொடர்ந்து சென்றே (2)

சென்று யிரத்தெட் டெனுமண்டந் தாண்டிச்செழுங்கடல
தென்றமூ லத்துறுஞ் சூரபன் மாவெனு மீருருவ
மொன்று மபானன் பிராணனைக் கூறிட் டுயர்த்தி
[யொன்றின்
நின்ற முருகனென் சற்குரு வின்று ளிணை துணையே. (3)

(சரத்தின்) வாசியின். (கணப்பொருளாய்) கண கணவென்னுஞ் சப்தத்தின் பொருளாய். (பின்கலையாந் தகரினுற்றுத்) சூரிய நாடியாகிய மேடத்தை (எதிர்த்துச் செயிக்க முடியாத தன்மையுடைய தலமாகிய கீழ் மூலத்தை)ச் சேர்ந்து. (திரமாய நந்தித் தலைவனைச் சார்ந்து) திரவிராசி யாகியதும் தோற்றுவிச் செயிக்க முடியாததுமாகிய, இடபத்தின் றன்மையுள்ள மேல் மூலத்தைச் சார்ந்ததாகிய, இடைகலைத் தலைவனாகிய சிவனைச் சார்ந்து (திகழுபயச் சரவேலை வாங்கி) சுழிமுனை என்னும் ஒருமுகமுள்ள படைக்கலத்தைப் பெற்று) (மயிலெனும் வாசி தனிலிவர்ந்து) நீலநிறம் பொருந்தியதும் தாவிப்பறக்குந் தன்மையுள்ளதும் அழிவைத் தரும் சிற்றமுள்ள விடத்தை (விட்டுச் செல்லுந் தன்மையுடையதை) யழிக்குந் தகவுள்ளதுமான வாசியை மேற்கொண்டு (சுரரா மகக்கருவி நாயகனுய்த் தொடர்ந்து சென்றே) தேவர்களென்னும், அகக்கருவி முப்பதும்

கோடியென்னும், கலைபொருந்தி, மும்மண்டலத்தைச் சார்ந்து, முப்பத்து முக்கோடியாக விளங்கும்) அகக் கருவிகளுக்குத் தலைவனாய், விடாது சென்று (சென்றாயி ரத் தெட்டெனு மண்டந்தாண்டி) மேலும் சென்று ஆயிரத்தெட்டி தழெனனுஞ்சிரத்தை (சூரியசந்திரர்கள் வசிக்குமிடதாதலால் அண்டமென்றும் பெயர்)க் கடந்து (செழுங்கடல தென்னு மூலத்துறும்) பெரும்புறக்கடற்ற கமைவாய்ந்த மூலாதாரத்தில், மகாரச்சிரவடிவமாயிருக் கும் (சூரபன்மாவெனு மீருருவ மொன்றும் அபானன் பிராணனைக் கூறிவிட்டு) அகக்கருவிகளைச் சிதைக்குந் தொழிலுடையதாய்ச் சூரன்பதுமன் யென்னும் இரண்டு உருவம் ஒன்றாகிய, பிராரணன் அபானனைப் பிரிவுறும் படி பகுத்து, (உயர்த்தி யொன்றின் நின்ற முருகன்) பிராணனை மேல் மூலத்தில் ஒளியிற் களிக்கும் பறவை.... சேவல்......என்னவுயர்த்தி. அபானனைக் கீழ் மூலத்தில் விடமென்னும் வாசியையுண்ணும் தன்மையுள்ள பறவை யென்னவமைத்து, மேற்கொண்டு நின்ற இளமைபுடைய வனை (என்சற்குருவின்றா ளிணை துணையே) எனது குரு நாதன், இரண்டு சரணங்களுந் துணை. குறிப்பு. சரத்தின் கணப்பொருளென்றமையால் ஆறுதலங்களிலும் ஆறு குணமாய் கண சப்தத்துடன் நடக்கும் பொருள் சரகண பவனென்றும் பெயர் உண்டாயினவாறுணர்க. சுப்பிர மணியன் என்பதும் சு. நலன்பொருந்திய பிரம நடுவாகி யுள்ள அணி. ஆறுதலமாகிய வரிசைப்பொருளென்னும் பெயருற்றமை காண்க.

சித்தர்கள் வணக்கம்

திருமூல வர்க்கமாய்க் கைலாய வர்க்கமாய்ச் சீர்நிறைந்து
பெருகியே யண்டரண் டங்களெல் லாநின்ற பேர்பெரிய
விருவொன் பதின்மராஞ் சித்த ரிணையடி யெம்மிதய
முருகித் துதித்து வணங்கியிந் நூன்முறை யோதுவோமே

திருமூலவர்க்க பரம்பரையாயும், கைலாயவர்க்க பரம் பரையாயும். நிறைந்த நலமுடையவர்களாய்ப் பெருக்க முற்றுத் தேவருல கெங்கணும் பொருந்தியவர்களையும், மிக்கவுயர்ந்தோராகிய பரமேச்சுவரன் ஆதியாய சனக

சனந்தன் சனற்த்தன சனற்குமாரர் சிவயோகமாமுனி பதஞ்சலி முனிவர் வியாக்கிர முனிவர் திருமூலர் என்னும ஆதிநவசித்தர்களையும், முருகவேள் அகத்தியர் காசிபர் விசுவாமித்திரர் வசிட்டர் கௌதமர் துர்வாசர் சுகர் கலைக் கோட்டார் என்னும் கைலாய நவசித்தர்களையும் என்னுடைய மனமுருகித்துதித்து அவர்களுடைய உபயசரணங்களில் வணங்கி இந்த நூல்முறையைச் சொல்லுவோம்.

ஓதுவஞ் சித்தர்கள் பற்பல வாரு யுரைத்தமொழி
ஏதுந் தெரியா துலகோர் தடுமா றினதறிந்து
சூதுக ளேது மிலாமலிந் நூன்முறை தொல்லுலகோர்
வாதுக ளின்றி யறியும் பொருட்டு வகுத்தனமே (5)

சொல்லுவது நாதாக்கள் அனேக வழியாய் சொல்லிய மாற்றம் ஒன்றும் அறியாது, சகத்தோர் வழிபிசகியதை யுணர்ந்து ஏமாற்றமொன்றுந் தராது, இப்பனுவல் விதி புராதன பூமியிலுள்ளோர் யாவரும் தர்க்கமில்லாது உணரும்படியாகப் பிரித்துரைத்தோம்.

வகுத்தவிந் நூலின் வயித்தியர் வாதிகள் மற்றெதையும்
பகுத்தறி பௌதிகர் மூலமா ராய்வோர் பலர்களுக்கும்
மிகுத்த விழையம் விளங்கும் படியாய் விரிபொருள்கள்
தொகுத்துரை செய்தோ மறிவோ ரறிவுச் சுடர்மணியே.

பிரித்துச் சொல்லிய இச்சூத்திரத்தில் மருத்துவர், வேதை செய்யும் வேதியர், பிறிதெல்லாவற்றையும் பிரித்தறியும் ஐம்பூதக் கலையறிஞர், முதற் பொருளாராய்வோர்கள் ஆகிய பலர்களுக்கும் அநேகம் விருப்பப் பொருள்கள் நன்கு தோன்றும் வகையாய் அளவற்ற பொருள்களையுந் தொகைப்படுத்திச் சொல்லியுள்ளோம். இதையுணர்வோர் அறிவொளி வீசும் சிறந்த இரத்தினமேயாம்.

சுடர்மணி யான தலைமையாந் தன்மையாய்ச் சொல்லுநல
பிடகருண் ணேக்காற் சரீர மறிந்த பெருந்தகையோ
ரிடராய்ச் சரீர மறுத்து வெளிநோக் கினிலறிந்து
படர்செய் தறுக்கின்ற பண்டித ராரோ பகர்கிலமே. (7)

ஒளி வீசும் இரத்தினமாகிய முதன்மைத் தன்மையுடையோராயுரைக்கத் தகுந்த சிறப்புடைய மருத்துவர், அகக் கண்ணால் உடலையுணர்ந்த உயர் பெற்றியுடையோர் வெறுப்போடு உடலைச் சேதித்துப் புறக்கண்ணாலறிந்து கோட்டாலை இழைத்துச் சேதிக்கு மருத்துவரை யாரென்று சொல்வோம். அவர் யாரோ நாம் அறியோம் (ஏனென்றால் உயிர் நிலைக்குக் கலையன்றோ முதன்மையாவது. அவ்வுயிர் நிலைக்கலை யறியாது, உயிரும் கலையும் அற்ற உடலைச் சேதித்துணரும் மெய்க் கலையறியாதவர்கள். அதாவது சூக்குமத்தை யறியாமற் தூலத்தை மட்டும் அறிபவர்கள். சூக்குமமாகிய வுயிர் விளங்கிக் கொண்டிருக்கும் உடம்புக்கு ஏற்கும்படி எப்படிப் பண்டிதஞ் செய்ய முடியும். என்பது பற்றியேயாம்)

மேலாம் பிடக ரியம நியம விதியொழுகி
மேலான சித்தர்கள் நூலெலா மாய்ந்தவ் விதியுணர்ந்து
நாலா விதந்தெரி வோரை யடுத்துநன் றாய்ப்பழகிக்
காலாய்ப் பிணியாளனைக் கவனிக்கக் கடமையெனே (8)

நியமம் கட்டளை பத்து வகை				இயமம் ஏற்பாடு பத்து வகை	
கேடு, பொய்	இவைகளை நீக்கு	செம்மை, வாய்மை	இவைகளைக் கடைப்பிடி	தவம், செபம்	இவைகள் வாய்க்கப் பெறுதலாம்
களவு, கீழ்மை		சேய்மை, மேன்மை		தெளிவு, நிறைவு	
கோபம், வெறுப்பு		நன்மை, பொறுமை		தானம், மோனம்	
சூது, மடி		நேர்மை, வேண்மை		நாதம், அருள்	
அழுக்காறு, தீச்சொல்		தூய்மை, சீர்மை		புனிதம், இனிமை	

உயர்ந்த மருத்துவர்கள், முயல்வன பத்துவகையினையும் அதனால் உடையன பத்து வகையினையும் உணர்ந்து, நடந்து உயர் நிலையடைந்த நாதாக்களால் ஆக்கப்பெற்ற

சூத்திரங்களை ஆராய்ந்து, அதனுண்மையை யறிந்து உயிர் நிலைக் கலையாகிய வாசி அமிதமாய், நாலங்குலமாம் விதம் தெரிந்தவர்களை நெருங்கிப் பழகி, தன்னுயிர்க் கலை போன்று நோயுற்றோனைப் பார்க்கக் கடமையாம்.

இவற்றுள் (கேடு) என்பது உயிர்க் கொலை முதலிய அழிவுச் செயல் புரிதலாம். அச்செயலால் பொய்மையும் உண்டாகும். அதை நீக்கிச் செம்மையுடையோனாய் (செய்யவனாய்) ஆகில் வாய்மை உண்டாம். (வாமி) இப்படிக் கொல்லாமையும், பொய்யாமையும் உடையோனாகிய பலத்தால், தனது பிராணன் நாள்தோறும் நசித்துப் போதலை அகற்ற, தவரென்னும் பெயரையுடைய உடற்றண்டத்தை யடையும் வழி சித்தியாம். அதனையடைதலே தவம். அத்தவத்தை அடையலாற் செபம் உண்டாகும். செபமென்பது தன்னிடமுள்ள உண்மைப் பொருளாகிய பிராணன் நாள்தோறும் பொய்த்து, வீணாகாமல் குரு உபதசம் பெற்று அதைச் செப்பல். அதாவது செபித்தலாம். (குருவுபதச மென்பது) கருவென்னும் மூலத்தினின்றும தோன்றிய பன்னிரண்டென்னும் வாசியாம். அதன் நாதத்தைச் செவ்வனே துலங்கும்படி செய்தலே குருவுபதசத்தைச் செபித்தலென்னும் பொய்யாவாக்கு. சத்திய வாக்கையுடையோனாதலாம்.)

(களவு) என்பது காமம் முதலிய கூடாவொழுக்கங்களாம், இவற்றால் (கீழ்மை) அதாவது பிறநிந்தை முதலிய் இழிவுகள் யேற்படும். இவற்றினின்றும் நீங்கி களவிலானாய் (சேயகன்) குழந்தையுள்ளம் உடையவனாய் ஆகில், கீழ்மை நீங்கி (மேலோர்) ஆகலாம். அப்படியானால் அதன்பயனாய் மனத்தின் அறியாமைத் தன்மை நீங்கி (அஞ்ஞானம் நீங்கி) (தெளிவு) என்னும் மெய்யறிவு (மெய்ஞானம்) உண்டாம். அதனால் (நிறைவு) என்னும் எல்லாம் உடையோனேந் தன்மையடையலாம்.

(கோபம்) என்பது புலைமுதலிய கொடுஞ் செயல்களாம். அதனால் (வெறுப்பு) என்னும் பொறாமை யேற்படும். இவைகளினீங்கி (நல்லோனும்) (பொறுமை) யுடையோனும் ஆகினால், அதன்பயனாய் (தானம்) தன்னுடற்றத்துவ மென்னுந்தன் சொந்த உடைமைகளை யெல்

லாம் குருபதமென்னும், மூலத்திற் சேர்க்குந்திறன் என்னும், பிரத்தியாகாரம் சித்தியாம். அதனால் (மோனம்) துவாதச அந்தம் (பன்னிரண்டாய் நின்ற வாசிமுடிவு) கிட்டும் :—

(சூது) என்பது ஏமாற்றிச் சீவித்தல் முதலிய வஞ்சச் செயல்களாம். இதனால் (மடி) சோம்பல் வறுமை முதலியன யேற்படும். இவற்றினீங்கி (நேர்மை)யும் (வேண்மை) கொடைத்தன்மையும் உடையோன் ஆனால், தன்னகத்தில் மாறுபாடாம் நிலையடைந்த சித்தாந்தம் கேள்வியுண்டாம் (மாறுபாடாம் நிலையென்பது வாசிபாழ் போனதால் சித்தத்தின் அந்தத்தானமாகி மூலம். கவிழ்தலாம். சித்தாந்தக் கேள்வியுண்டாதல் அந்தத்தானத்தில் பத்துவிதமாகிய நாதமும் உண்டாதலாம்) அந்நாதத்தை யறிந்து நாதனானால் அதனால் மடியென்னும் மிருத்துக்கள் நீங்கி (அருள்) அருளுந்தன்மையுண்டாம் (அருட்குரு நாதனாவாள்)

(அழுக்காறு) என்பது கள்ளுண்ணல் முதலிய உன்மத்தப் பொருள்களை யுண்ணலாம். (அதனாற்றீச்சொல்) முதலியன வுண்டாம். இவைகளினீங்கி (தூய்மை)யும் (சீர்மை)யும் உடையோனானால், அதன் பலத்தால் தன்னகத் தழுக்காகிய காமக்குரோத முதலிய எண்வகை இராகங்களும் அற்று, (புனித)னானால் அதனால் (இனிமை) இருளறும் சொல், மாயையகற்றுஞ் சொல், என்னும் மதிசொல் அமிதச் சொல், உடையோன் ஆதலாம் :—

இவற்றுள்க் கேட்டினாற் பொய்யும், களவினாற் கீழ்மையும், கோபத்தால் வெறுப்பும், சூதினால் மடிமையும், அழுக்காறினால் தீச்சொல்லும், உண்டாதலால் கேடு, களவு, கோபம், சூது, அழுக்காறு இவ்வைந்தையும் பஞ்ச பாதக மென்று சொல்லுவர். இவற்றைச் சாதாரணமாக கொலை, காமம், புலை, சூது, கள், எனவுஞ் சொல்வதுண்டு.

மேற்கூறிய*—முயல்வன பத்துவகை உடையன பத்துவகைகளை வடநூலார் இயமம் பத்து, நியமம் பத்து என்பர்.

இயமம் பத்து	நியமம் பத்து
அங்கிஸை	தவம்
சந்தானம்	சந்தோஷம்
ஆர்த்திகம்	ஆர்த்திகம்
பிரமம்	தானம்
ஆட்சேபம்	சிவபூசை
க்ஷமை	சித்தாந்த சிரவணம்
திருத்தி	சிவம்
இதாகாரம்	சிவமதி
மிதாகாரம்	விரதம்
சவுசம்	தூய்மை

மேற்கூறிய ஐம்பெரும் பாதகங்களேயும், அதினுட்டொடர் ஐம்பாதகங்களேயும் நீக்கி, யதன்பலனுய் உண்டாகும் பத்து நற்பயன்களேயும், அடையவல்லவரே மனிதனுய்ப்பிறந்த பயனேயடைந்தவர்கள். அந்த இரண்டு ஐந்தாகிய பாதகங்களே யகற்ருதவர் யாவரேயாயினும் அவர்வீணரேஎனவுரைக்கும் நாதாக்கள் மறைநூல் எல்லாம்.

நேராய்ப் பிணியுளோர் பண்டிதர் தெய்வ நிகரெனநற்
சீராய் மதித்தென்றும் வாய்மையுரைத்தவர் செப்புமொழி
நேராய் நடந்து பலர்புன் மொழிகொள் நினேப்புமற்று
ஆராய்ந்து முன்னூழகற்றிட நோயே தவனியிலே, (9)

நேர்மையுடன் நோயுற்ருேர்கள் (யாவரேயாயினும்) மருத்துவரைக் கடவுளர்க்குச் சமமாகச் சிறப்புடன் மதித்து, எப்பொழுதும் அவரிடம் உண்மையேமொழிந்து அவர்சொல்லும் நெறிதவருது நடந்து, பலர் சொல்லும் சில்லரை வசனங்களேக்கொள்ளும் எண்ணமும் அற்று, பரிசீலனேசெய்து (அந்நோய்க்குக் காரணமாகிய) பழவினேயை நீக்க பிணியென்பது உலகில்யேது.

அவனியிற் பொய்யர் குடிகாரர் வஞ்சக ரானவர்க்கும்
தவருன காம மதிகமுள் ளோர்க்குஞ் சதிகொலை செய்
யவர்கட்கும் பண்டிதர் மீதவ நம்பிக்கை யாமவர்க்குந்
தவருகும் பண்டிதஞ் செய்தல் மருந்துந் தவறுறுமே. (10)

உலகில் சத்தியமில்லாதவர், மதுவருந்துபவர், சூதுச் செயலுள்ளவர், தகாதஇச்சை மிகுந்துள்ளோர், கொடிய கொலைத்தொழிலோர், மருத்துவரிடம் நம்பிக்கையில்லாதவர், ஆகியோர்க்கு மருத்துவர்கள் மருத்தளித்தலுந்தீது மருந்தும்பலிக்காது.

பாயிர முற்றிற்று.

உற்பத்திப் படலம்

அருள்விளை யாட்டா யகிலமீன் றிட்டா ளமைத்திடுஞ்சீர்ப்
பெரும்பொரு ளெண்ணிற் பலவுள தரயினும் பேசரிதாந்--
திருமந் திரமெழு கோடியு மூன்றெழுடைந் தீதினெடு
ஒருமந் திரத்து ளடங்கிய போலொன்ப துட்படுமே. (11)

அருள்திருவிளையாட்டாகச் சகல உலகங்களையும் பிறப்பித்தவள் (வாலைத்தாய்) ஏற்படுத்திய, சிறப்பு மிக்க பொருள்களைக் குறிக்கில், அனந்தமாம். ஆனாலும் சொல்லுக்கு எட்டாததாகிய திருமந்திரங்கள் சத்த கோடியும். ஆதிஎழுத்தாகிய மூன்றுஎழுத்து (பிரணவம்) அத்துடன் ஐந்தெழுத்து. (பஞ்சஅச்சரம்) அத்துடன் உயிராய்விளங்கும் ஓரெழுத்து. (ஏகஅச்சரம்) ஆகிய ஒன்பதுள்ளானுற் போன்று, ஒன்பது வகைக்கு, உள்ளாகும்.

ஒன்பதுள் ளாக்கி யுரைப்போ நரர்விலங் கோதிமமும்
வன்மையாம் பூச்சி புழுவுரு நந்து வசைப்புழுமா
நன்மையா மூலிகை யாமிவ் வகையு நவிலவொணுப்
பன்மைய தாயினு மெல்லாமு மொன்பான் பகுப்புறுமே

ஒன்பது வகைக்குள்ளாக்கிச் சொல்லுவோம். மனிதர் (நரர்) மிருகம். (விலங்கு) பறவை. (ஓதிமம்) வலிமைமிக்க தாகிய-பூச்சி. புழு. (உரு) அட்டை. (நந்து) சங்கு. (வசைப் புழு) துர்க்கிருமி. மூலிகை- (ஆகவொன்பது) ஆம். இவ்வகைகளும் சொல்லிலடங்காத விரிவுள்ள தாயினும், சகலமும் ஒன்பது பகுப்பேயாகும்.

பகுத்துரை செய்வோ மிலக்கிய மாயொன்று பாருமலப்
பகுப்பொன்று மோரறி வாகிய மூலிகை பற்பலவு
மிகுத்த மரமுஞ் செடிகொடி கீரைபுல் வெய்யகுண-
மிகுத்தபூண் டுங்கள்ளி பாசியுங் காளானு மென்றேன்
[பதே. (13)

பகுத்துச் சொல்லுவோம். உதாரணமாக வொன்று நோக்குவீர். மலப்பகுப்புள்ளடங்கும் ஒரு அறிவுள்ள மூலிகை, அனந்தமும். மிக்கதாகிய. மரம். செடி. கொடி. கீரை-புல். (வெம்மைக்குண மிக்கதாகிய) பூண்டு. கள்ளி- பாசி. காளான். எனும் ஒன்பதே.

ஒன்பதே யாயினு மிப்போ துரைத்ததொவ் வொன்றினி
ஒன்ப துளதா மதிலுமவ் வாறுள தொன்றினுளும் [லும்.
ஒன்ப துளதா மகிலமு மவ்வித மோதுவங்கேள்
ஒன்பது மண்ணீர்கன் முச்சுடர் வானிரு ளும்மொளியே

ஒன்பது வகையே யானாலும், இப்பொழுது சொல்லியது ஒவ்வொன்றிலும், ஒன்பது உண்டு. அந்த ஒவ்வொன்றிலும் அப்படியேயுண்டு. தனிப்பட்டவொன்றிலும் ஒன்பது உண்டு. இவ்வகில முதலிய வடங்கலும் அவ்விதமேயாம். அதைச் சொல்லுவோங் கேளீர். அவ்வொன்பது. மண், நீர், கல், சூரியன், சந்திரன், அக்கினி, ஆகாயம், இருள், ஒளி இவையே.

ஒளிமய மானவா ரூதார முப்பாழொ டொன்பதுவாம்
ஒளிமய மானதே வொன்பானயன்மா லொருமருப்போ
ஒளிமய மான வுருத்திரன் மாகேச னும் முருகன்
ஒளிமய மான சதாசிவ னீசனு முன்மணியே. (15)

(இவ்வாறியாக்கையுள்ளும்) சோதிமயமான ஆரு தாரம் அக்கினிமண்டலம். ஆதித்தமண்டலம். மதி மண்டலம். என்னு முப்பாழுடன். ஒன்பதாம். சோதி மயமாக விளங்குந் தெய்வங்களும். பிரமன். விட்ணு. கணபதி. தேசோமயமாகிய உருத்திரன். மாகாசன். முருகன். வாமமயமாகிய-சதாசிவன். சிவன். மனோன்மணி. ஆகவொன்பதே.

உன்மனே யுள்ளொளி யொன்பதுங் கண்டதா யுற்றிடுவர்
நன்மை யுயர்ச்சிவ யோகிய ரிவ்வண நாமிசைத்த
வொன்பத னுண்மை யறிவ ரறிஞரவ் வொன்பதனின்
றன்மை யறிந்தவர் முழுதுஞ் சொலற்கரி தாகுமிதே (16)

உள்வீட்டிற்குள் (உடம்புள்) இச்சோதி யொன் பதையுங்கண்டு, அதுவே தானுக ஆவார்கள். உயர்நல முடைய சிவயோகிகள், இப்படியாக நாம் சொல்லிய ஒன்ப தின் உண்மையை மெய்மையறிவுடையோர் அறிவார். இவ்வாறு ஒன்பதின் தகைமையை யறிந்தவர்கள் அறிந்ததை யெல்லாம் விளக்க, அடங்காததாகும்.

இதுநூலின் வாழ்நாண் மறையின் பொருளு மிலக்கணங்க
ளதுவுந் தொகுத்துரை செய்வோ மருந்தது வாம்
[பொருள்க
ளதுவிந் நிலத்துங்கடன்மலே யஃதினு மாமவைக
ளதுவே சரமு மசர மெனவிரண் டாம்வகையே (17)

இச் சூத்திரத்துள் ஆயுள்வேதப் பொருளும் அடை யாளங்களும் (இலக்கணம்) தொகுத்துச் சொல்லுவோம். மருந்தாகும் பொருள்கள், இப்பூமியிடத்தும், கடலினிடத் தும், மலேயினிடத்தும், உண்டாகும். அவைகளெல்லாம் சரப்பொருள், அசரப்பொருள் (உயிர்ப்புள்ளவை உயிர்ப் பில்லாதவை) இரண்டு வகையேயாம்.

வகையாஞ் சரப்பொருள் மூலிகை கோற்புழு வண்டுருநல்
வகையாம் புழுப்பூச்சி புண்மா நரராகு மற்றுமிதன்
வகைநே ரறிய விலக்கண நன்ருய் வகுத்துரைப்போம்
வகையே நிரனிறை யாயத னேடொடு வைத்துணரே

அவ்வகையிற் சரப்பொருளாவன. மூலிகை துர்க்கிருமி. சங்கு, அட்டை, நற்புழு, பூச்சி, பறவை, விலங்கு, மனிதர், என்னுமிவைகளாம். மேலும் இவற்றின் வகையை முறையேயுணர, இலக்கணம். முறையே வகுத்துச் சொல்வோம். (நிரனிறைப் பொருளாக) வரிசையாக, அதனேடு அதனேடு சேர்த்து, அறிவீர்களாக. (இவற்றுள் உற்பத்திக் கிரமப்படி, ஒளி, இருள், வெளி, வளி, தீ, மதி, ரவி, கல், நீர், மண், கூறுய் வகுத்தமையுணர்க)

உணர்வீர் மலமெச்சில் முட்டைபல் தோல்நக முஞ்சருமந்
தணந்தே யுரோமமுட் சேருமுள் ளண்டநஂ தவிர்ந்த
[தற்குக்
குணமே மிகும்விந்து பாலு மமுரியுங் கூட்டுடன்சே
வணமே மிகுநாத முஞ்சேர் சரமாம் வகையதற்கே. (19)

இவைகள் சரப்பொருளிலக்கணம்.

அவ்வகை யறியவும்.

(1) மூலிகை. மலம்.
(2) கோற்புழு, மலம், எச்சில்.
(3) சங்கு, மலம், எச்சில், முட்டை.
(4) அட்டை, மலம், எக்சில், முட்டை, பல்.
(5) புழு, மலம், எச்சில், முட்டை, பல், தோல்.
(6) பூச்சி, மலம், எச்சில், முட்டை, பல், தோல், நகம்.
(7) பறவை, மலம், எச்சில், முட்டை, பல், உரோமம், [நகம், முள்.
(8) மிருகம், மலம், எச்சில், விந்து, பல், உரோமம், நகம், [பால், அமுரி.
(9) மனிதர், மலம், எச்சில், விந்து, பல், உரோமம், நகம், [பால், அமுரி நாதம்.

கேளா யிதுமுறை யேமூ லிகையுட் கிளத்திடுவோங்
காளா னெடும்பாசி கள்ளியும் பூண்டுபுல் காய்ப்பொருளும்
நீளுநங் கொடிநற் செடிமர மூல மிலையுமலர்
மாளாப் பிசின்வித்து காய்கனி பட்டை வயிரமுமே. (20)

மேற்கூறிய வரிசைப்படியே ஒன்றுள் ஒன்பதுணர் மூலிகை வகையுட் சொல்லுவோம்.

(1) காளான், மூலம்.
(2) பாசி, மூலம், இலை.
(3) கள்ளி, மூலம், இலை, பூ.
(4) பூண்டு, மூலம், இலை, பூ, பிசின்.
(5) புல், மூலம், இலை, பூ, பிசின், வித்து.
(6) கீரை, மூலம், இலை, பூ, பிசின், வித்து, காய்.
(7) கொடி, மூலம், இலை, பூ, பிசின், வித்து, காய், பழம்.
(8) செடி, மூலம், இலை, பூ, பிசின், வித்து, காய், பழம், [பட்டை.
(9) மரம், மூலம், இலை, பூ, பிசின், வித்து, காய், பழம், பட்டை, வயிரம்.

மேலு மசரப் பொருளின் றொகையை விரித்திடமென்
மேலு மளவிற் கரியன வாயினு மிவ்வகைகள்
நாலிணை டைந்து ளடங்கு முவர சரமுமுப்பு
மூலம்பை வட்டுபொன் மூலநீர் காய்ப்பொருள் மூலிகையே

மேலும் அசரப்பொருள்களின் எண்ணிக்கையைச் சொல்லத் தொடங்கின், மென்மேலும் அளவிலடங்காமை யாகும், அப்படியாயினும், இந்த அசரப் பொருள்கள் ஒன்பது வகையுள்ளடங்கும். அது உவரசரம், உப்பு, உவரசர மூலம், பச்சைவட்டு, பொன், பச்சைவட்டு மூலம், நீர், காய்ப்பொருள், மூலிகை ஆக ஒன்பதாம்.

மூலிகை யோடொன் பதுவகை யாமிம் முறைப்படியே
ஞாலத் தசரப் பொருள்க ளடங்கிடு நாமுலகெக்
காலு மறியப் படுபொரு ளெல்லாங் கணித்துரைக்கிற்
பால முதற்பூத மொன்பதுக் கொன்பதெண் பத்து
[வொன்றே. (22)

மூலிகை யீறுகச் சொல்லிய, இவ்வொன்பது வகைக் குள் உலகத்தில் உள்ள அசரப் பொருள்க ளெல்லாம்

அமையும், நாம் உலகில் அறியக்கூடிய பொருள்களெல்லாவற்றையும், கணக்கிட்டுச் சொல்லில் (அவைகளெல்லாம்) மண்முதலிய பூதம், ஒன்பதுக் கொன்பது ஆகிய எண்பத்தொரு வகையேயாம்.

அவ்வெண்பத் தொன்றின் பெயர்கள்.

Aluminium. Antimany. Argan. Arsanic. Barium. Berylliam. Bismuth. Boran. Bromine. Cadminm. Caesium. Calcium. Carban. Cerium. Chlorine. Chromine. Cobalt. Columbuim. Copper. Dysprosium. Eribum. Europium. Fluorine. Godolinium. Gallium. Germanium. Gold. Helium. Hydrogen. Indium. Iocline. Iridium. Iron. Kryptan. Lonthanum. Lead. Lidhium. Lutecium. Magnesium. Manganese. Mercury. Mlybdenium. Neodynium. Neom. Nickel. Nitrogen. Osmium. Oxygen. Palladium. Phospposus. Platinum. Potossium. Proseadynium. Radium. Rhodium. Rubidium. Ruthenium. Samarium. Scaandium. Selenium. Silicum. Silver. Sodium. Strontium. Sulphor. Tantalum. Tellurium. Terbium. Thallium. Thorium. Thulium. Tin. Titanium. Tingsten. Uranium. vanadinm. Xenon. Yetterbium. Yttrium. Zinc. Zirconium.

எண்பத்தொன் றுன கலப்பன்றி யெப்பொரு ளெங்குமிலை
எண்பத்தொன் றுன பொருளறிந் திவ்வுல கெப்பொழுது
மின்ப மடைதற் கரிதென் று மின்சாரமெந்திரமு
மென் று மளிக்கு நலத்துட் பலமடங்கின் னலமே (23)

இவ்வெண்பத்தொரு பொருட் கலப்பாலாகாத, எப்பொருளும், எங்கும் இல்லை. இந்த எண்பத்தொரு வகை

யாம் பொருளையறிந்து, இவ்வகிலத்தோர் எப்பொழுதும் சுகமடைதல் முடியாத 'காரியமென்று, இயந்திரத்தாலும் மின்சாரத்தாலும் ஆம், (அப்பொருள்களின்) நன்மையினும், பன்மடங்கு இனிய நலம் பயப்பதாயும்.

நலமே யுடைத்தாய்க் கிடைத்தற் கெளிதா யெனற்
பொருளின்
பலமுடையதா யாயிரத் தைஞ்ஞூற்றுப் பன்னிரண்டு
வலவாம் பொருள்க ளுரைத்தனர் வாத வயித்தியமாங்
கலைஞர்க் கவை கிடைக்காவிடில் வைப்புங் கழறினரே(24)

(அப்படி) நலந்தருவதுடன், எளிதில் கிடைக்கக் கூடியதாயும், உயர் நலமுடைய எல்லாப் பொருள்களின் வலிமையும் உடையதாயும், ஆயிரத்தைஞ்ஞூற்றுப் பன்னிரண்டு, வலிமை மிக்க பொருள்கள், சொன்னார்கள். வாதிகளும் வயித்தியர்களுமாகிய, கலைவல்லவர்களுக்கு அப், பொருள்கள் கிடைக்காவிடிற் செய்து கொள்ளும்படி சரக்கு வைப்பு முறைகளும், சொல்லியுள்ளார்கள்.

இனமருந் தாயிரத் தைஞ்ஞூற்றுப் பன்னிரண் டென்றவற்
(றின்
கனமாம் விபர மிசைப்போமண் ணீர்கல் லிரவிமதி
யனலும் வெளியு மிருளொளி யொன்பது வாங்குணமா
வனவொன்ப தெட்டேழு மாறஞ்சு நால்மூன் றிரண்டு
(மொன்றே 25

அவ்வினங்கள், ஆயிரத்தைஞ்ஞூற்றுப் பன்னிரண்டு என ஆகியவற்றின், மேன்மையான விபரத்தைச் சொல்லுவோம். மண், நீர், கல், இரவி, மதி, அழல், வெளி, இருள் ஒளி ஆக ஒன்பதாம். இதன் குணம் முறையே ஒன்பது, எட்டு, ஏழு ஆறு, ஐந்து, நாலு, மூன்று, இரண்டு, ஒன்று ஆம்.

அவற்றின் விபரம்.

(9) மண், பரிசம், ரசம், பரிசகந்தம், கந்தம், ரூபம், கந்தரசம், உணர்ச்சி, சப்தம், உணர்ச்சியின்கந்தம்.

(8) நீர், ரசம், பரிசகந்தம், கந்தம், ரூபம், கந்தரசம், உணர்ச்சி, சப்தம், உணர்ச்சியின்கந்தம்

(7) கல், பரிசகந்தம், கந்தம், ரூபம், கந்தரசம்,உணர்ச்சி, சப்தம், உணர்ச்சியின்கந்தம்

(6) ரவி, கந்தம், ரூபம், கந்தரசம், உணர்ச்சி, சப்தம், உணர்ச்சியின்கந்தம்

(5) மதி, ரூபம், கந்தரசம், உணர்ச்சி, சப்தம், உணர்ச்சி, யின்கந்தம்

(4) சிகி, கந்தரசம், உணர்ச்சி, சப்தம், உணர்ச்சியின் கந்தம்

(3) வான், உணர்ச்சி, சப்தம், உணர்ச்சியின்கந்தம்

(2) இரா, சப்தம், உணர்ச்சியின்கந்தம்

(1) ஒளி, உணர்ச்சியின்கந்தம்

ஒன்ருக மண்கற் குணம்பதி ஞறினி லுற்றுமற்றும்
நன்ருய பூதமேழ்சேர வுவரச ரத்தொகைகள்
குன்ருது நூற்றுமுந் நான்காம ணீர்கற் குணமதுவு
மொன்பது மெட்டேழ் கலப்பொன்ரு மையஞ்சு வுப்பது
(வே 26

மன்னின்குணம் ஒன்பது, கல்லின் குணம் ஏழுடனுக வொன்றுபடவாகிய பதிஞறு குணம். இவையொழிந்த மற்றய ஏழு பூதங்களுடன் கூடப் பதிஞறு ஏழு நூற்றுப் பன்னிரண்டு. உவரசரங்கள் ஆகின. மண்குணம் ஒன்பது நீரின் குணம் எட்டு. கல்லின் குணம் ஏழும், பொருந்திய தால் ஆகிய இருபத்து நாலும் இவற்றின் கலப்பு வகைகள் ஒன்றும் கூட, இருபத்தைந்து உப்பாயின.

அதுபோன் றிரவிக் குணமாறுடன்பூத மற்றையநா
லதன்குணம் பத்தும் பதிஞரும் பச்சைவட் டாகுமதி
யதன்குண மஞ்சின்முன் பூதக் குணங்கூட வாம்பதினஞ்
சதனுடன் பச்சைவட் டுக்கலப் பொன்று முப்பத்திரண்
(டே. (27)

அதுபோலவே, இரவியின்குணம் ஆறுடன்,மற்றைய நான்கு பூதங்களாகிய, தீயின்குணம் நாலும்,ஆகாயத்தின் குணம் மூன்றும், இருளின் குணம் இரண்டும், ஒளியின் குணம் ஒன்றும், ஆகிய பத்துங் கூடிப் பச்சைவட்டுப் பதினாறும், சந்திரனின் குணம் ஐந்தில், மேற் கூறிய நான்கு பூதங்களின் குணம் பத்தும் இவற்றின் கலப் பொன்றுங் கூடிப்பச்சை வட்டு மூலம், பதினாறும் ஆக முப்பத்திரண்டு பச்சைவட்டுகள் ஆயின.

இரண்டா மிரவி மதிகுண மாறுமஞ் சிப்பதினொன்
றிரண்ணிய மாம்வெளி யின்குண மூன்றெரு டிருளுமொளி
இரண்டுஞ்சேர்ந் தாருகு நீரிவற் றின்வெறி நீரதொன்று
மிரண்டற் றிடுங்கலப் பாம்நீரொ டெட்டாமி னீர்வகையே

இரவி மதியென்னும்,இரண்டின் குணமாகிய ஆறும், அஞ்சும்கூடிய, பதினொன்று, பொன்வகை பதினொன்றும். வெளியின் குண மூன்று இருள்க் குணம் இரண்டு, ஒளி யின் குணம் ஒன்றுங் கூடிய ஆறும், இவற்றின் வாசனை யும், இவற்றின்கலப்பு ஒன்றும், ஆகஎட்டும் நீர்வகையாம்.

நீர்மை யிரண்டா மிருள திரவி நிலவுடனே
சேர்ந்தி ரிரண்டுபூ தக்குண மாமவை சேருமுப்பத்
திர்பச்சை வட்டுக் கிரண்டாகக் காய்ச்சக்கெட்டு யெட்டாஞ்
சேர்ந்தெலா மைம்பதஞ் சோடிரண்டாமிதின் சேர்க்கை
(யதே. 29

இரண்டு குணமாந் தன்மையுடைய, இருளானது (முன்பு சொல்லியபடி) நான்கு பூதங்களுடன், இரவிமதி கூட, உண்டாகிய பச்சைவட்டு முப்பத்திரண்டுடன், கூட இரட்டிப்பாய் காயச்சரக்கு அறுபத்து நான்காம். இது வரை சொல்லிய பொருள்களை எல்லாம் ஒன்றுகூட்டிய தொகை, இருநூற்றைம்பத் திரண்டாம்.

அதன்குணஞ் சேர விருநூற்றெரு டைம்பத் திரண்டுகலப்
பதுவான நீராகு மாகவைந் நூற்றுநான் காமிசைத்த
விதுவகை யெட்டிற் கிரட்டித் துவரச ரத்தொகையா
மதுவகை யொன்றினிற் கொன்பது வாகு மருந்ததுவே.

அதன்குணங்கள் சேரவுண்டாகிய, நீர் இருநூற்றைம் பத்திரண்டுங்கூட, மொத்தம் ஐந்நூற்று நான்காம். இப் படியாகச் சொல்லிய விவ்வகைகள் எட்டிற்கும் யிரட்டி த்தும், உவரசரத்தொகை நூற்றுப் பனிரண்டிற்கு ஒன்றுக்கு ஒன்பதாயும் ஆகியமருந்துகள்.

மருந்தான மூலிகை யாயிரத் தெட்டாகு மாகவெலா
மருந்தா யிரத் துவைஞ் ஞூற்றுப் பனிரெண்டு மாபொ
[ருளா
மருந்தின துற்பத் தியின்விவ ரங்கள் வகுத்துரைத்தோ
மருந்தின் பெயர்விப ரங்க ளினிமேல் வரைகுவமே. (31)

அம்மருந்து வகையேயாயிரத்தெட்டு மூலிகையாம் ஆகயெல்லாமுங் கூடியது, ஆயிரத்து ஐநூற்றுப் பனிரண்டு உயர்பொருள்களாம். மருந்து உற்பத்தியை யிதுவரை விவரமாய் வகுத்துச் சொன்னோம். இனிமேல் அம்மருந்தின் பெயர்களைச் சொல்லுவோம்.

உற்பத்திப்படலம்

முற்றிற்று.

பெயர்ப்படலம்

மண்கூருகிய வுவரசரப்பெயர்

கலிவெண்பா.

உவரச ரங்க ளுரைப்போந் துரிசி
நவநிமிளை யப்பிரக நத்தை - யுவர்மண்
கருமணலுஞ் செம்மண் கடனுரைபூ நாகங்
கருவண்டு சங்கு கரடி - குருவண்டு
முட்பன்றி மீனெலும்பு முட்டைபுத் தான் பவளம்
முட்சங்கு நண்டாமை முள்ளெலிசெவ் - வட்டை

தவளை!கிளிஞ்சில் தராளமதன் சிப்பி
யுவரியினற் பாசி யுயர்மண் - டவள
மணல்செம்பு நாக மணல்வங்கந் தங்க
மணலயம்வெள் ளிய மணலும் - வணமான
கோப மெலும்புமயிர் கோழி மயிலிறகு
தாவமுறு மாட்டாடு தந்தியுமான் - கோபமிகும்
பன்றிகாண் டாமிருகப் பல்மாங் கிஷபேதி
கன்மதமுங் காந்தநா கப்பச்சை - கன்னுதம்
அத்தியின் பேதிசுவ ணப்பேதி வேட்டுவன்மண்
கத்தூரி யாமெலும்புங் கானிலுறை - புத்துமண்ணோ
டைம்பத் தறுவகைய தாகு மிதன்மூல
மைம்பத் தறுவகைகே ளஞ்சணக்கல் - பைம்பொற்
சிலைவெள்ளி நாகவங்கஞ் செம்புகா ரீயச்
சிலைக ளிரும்புந் திராவின் - சிலையோடு
வெண்கலமு நாறும்பொன் வெற்புப்பே ரோசனையு
மண்கலஞ்செங் கல்லு மலைநாரும் - மண்டுகக்
கற்கெண் டகச் சிலைக்கற் காவிமந் தாரசிலைக்
கல்வெண் ணிறச்சுக்கான் கல்லீரக் - கல்லுஞ்
சிலாவங்கக் கல்மாக்கல் தேக்கல் கருங்கல்
சிலாநாகக் கல்லுங்கற் சிட்டஞ்-சிலைக்கால்
மரகத பச்சையிரச வத்தக்கல் பட்சி
யரசன்கல் மாந்துளிர்க்கல் லாசில்-தராளமொடு
மாணிக்கம் பச்சை வயிரம் வயிடூர்யம்
வேணிக்கல் நீலங்கோ மேதகமுங்-கோணிற்குந்
தண்டு குருந்தக்கல் சாலக் கிராமங்க
தண்டுக்கல் மஞ்சட்கல் நாவக்கல்-வெண்டுய்ப்
படிகஞ் சிலாசத்து பார்சுக்கான் காஷ்மீரப்
படிகங் கருஞ்சுக்கான் பாருங்-கொடியாஞ்
சிலைக்கல் விடக்குச் சிலைசாத்ர வேதிச்
சிலைதுத்தஞ் சூடாலை சேரக்-கலையோயி
ரைம்பத்தா ருகு மறிவீ ருவரசர
மென்பவற்றின் மூலமிது (50)

நீர்க்கூருகிய உப்பு
இருபத்தைந்தின் பெயர்

உப்பிருபத் தைந்தை யுரைப்போஞ் சவுக்கார
மிப்பாரின் நாத மெவச்சி கடற்-கப்பலொடு
சத்திசா ரங்காசிச் சாரஞ் சவுட்டுப்பு
அத்தமாஞ் சார மமுரியுப்புச்-சுத்தவெண்
காரஞ்சூ டன்சினக் கார நறுமணமாம்
பூரங் கரியுப்பு பொட்டிலுப்பு-நீர துவாம்
இந்துப்பு வாரி நுரை யேமம்பர் மீனம்பர்
சிந்து லவணந் திலாலவணம்-கெந்தி
லவணமுநற் காச்சு லவணம் வளைகி
லவணம் பிடாலவணம் நன்றும்-லவணங்க
ளையஞ்சுஞ் சொன்னே மரிய மருந்தினங்கள்
செய்வண்ணஞ் செய்யுமிதே. (56)

ரவியின் கூருகிய பச்சைவட்டுப் பதினாறும் தீயின் கூருகிய பச்சைவட்டு மூலம் பதினாறும் கூடிய பிறவிப் பச்சைவட்டு முப்பத்திரண்டின் பெயர்கள்.

பிறவியாம் பச்சைவட்டுப் பேர்கே ளிலிங்கம்
பிறவி யரிதாரம் பெண்ணுள் - கறையோடு
சீர்பந்தஞ் சங்கம் சிலைகல் சரக்காண்டம்
ஏர்வெள்ளை கௌரி இனிமையும் - பாருண்டாம்
அப்பிரகங் கோளகஞ்சீ தாங்கமுங் கச்சால
மொப்பில்லாப் பொன்னி யுயர்கலையீர் - செப்பியவிப்
பச்சையாம் வட்டுப் பதினறின் மூலங்கேள்
பொச்சை மதமும் புரவிப்பல் - பச்சை
முகிலவுபல் தொட்டி முரதஞ் சரலாங்க
மகிலம் பலண்டுருக மாதி - மகிபனெடு
கற்கடகம் வைக்கிராந்தம் காந்தம் அயப்பகையுங்
கற்பரிநற் றுற்தமுமாங் காண் (62)

பரங்கிவைப்புப் பச்சைவட்டுப் பதினறும் பச்சை வட்டுமூலம் பதினறுங்கூடிய முப்பத்திரண்டின் பெயர்கள்.

பரங்கிவைத்த வெண்ணன்கு பச்சவட்டின் பேர்கேள்
சுரக்கெந்தங் கெந்தகமுஞ் சூதஞ் - சுரர்கோமான்
சாதிலிங்கஞ் சோரமிரத் தங்கார் முகிநீலஞ்
சோதிமுறு வற்கோடா சூரிகருப் - போதிமமும்
நாகந்துத் தஞ்செப்பு நற்றெட்டி புத்தொட்டி
யாகப் பதினறி தன்மூல - மாகுமாவை
சாவற்பூக் கெந்திவைப்புத் தாரவீ ரந்துரிசி
தேவியாங் கௌரியும்பொற் சிங்கியும் - சேவணச்
சிங்கி மிருதாருச் சிங்கிரசி தச்சிங்கி
தங்க மயமிவைய தன்றெட்டி - குங்குமமும்.
பஞ்சபட்சி வெள்ளை பவளப்புத் தும்லவணம்
அஞ்சாறும ரெண்டிவைக ளாம். (68)

மதியின் கூருகிய பொன்வகை பதினென்றின் பெயர்.

வெண்பா

பொன்பதினென் ருவனசெம் பொன்வெள்ளி யூரல் (மிகும்
பொன்கஞ்சஞ் செம்புகரும் பொன்னிரண்டு-மொன் (றிரண்டு
வங்கந் தராப்பொன் வகை சொன்னேம் வாதிகட்குச்
சங்கை யறவெளிதாய்த் தான் (69)

வெளியின் கூறுகிய நீர்வகை

எட்டின் பெயர்கள்

நீரின் வகையுப்பு நீர்சுத்த நீர்சத்து
நீருந்தீ நீர்புளிப்பாம் நீர்மதுர-நீர்வெறிநீ
ரெல்லாங் கலந்த நீ ரெட்டாகு மாமிவைக
ளெல்லாம் விரிவறிக வே (70)

இருளின் கூறுகிய காயச்சரக்கு

அறுபத்து நான்கின் பெயர்

கலிவெண்பா

காயச் சரக்கறுபா னுன்கா வனசுக்குங்
காயங் கலினி கரிக்கலினி-காயஞ்
சதகுப்பை ரெண்டு தனலியின் மூல
மதுவெள்ளை யோடுகறுப் பாகு-மிதுபோற்
கடுகு புளியிவைகள் கான்சீரஞ் சீரங்
கடுகு வுரோகணிநா கப்பூ-கடுதான்றி
நெல்லி செவிய நிசிநன் மரநிசியும்
மல்லிகந்த மாஞ்சிசடா மாஞ்சி செவ்-வள்ளி
அரக்கு மெழுகு அதிமதுர மோமம்
அரத்தை கிராம் பேல மார-மிரத்தவணக்
குங்குமப்பூ சாந்தங் குரோசனையுங் கஸ்தூரி
கங்குட்டஞ் செங்கோட்டை காரகிலுங்-குங்கிலியம்
குந்திருக்கங் குக்கிலொடு கூகைநீர் கார்போகி
மந்திட்டி கோட்ட மதிவிடையம்-வெந்தயமும்
வாலுளுவை யுஞ்சின்ன வாலுளுவை சாதிக்காய்
கோலஞ் சிறுதேக் கொடுகெந்த-மூலந்
தமாலஞ்சா திப்பத்ரி தாளீசம் பத்யச்
சுமனசந்தே சாவரமுந் தூணி-யமிசமோ
டெட்டெட்ட தாகு மினியுரைப்போ மாயிரத்து (80)
எட்டான மூலிகைகளே.

ஒளியின் கூறுகிய ஆயிரத்தெட்டு

மூலிகைப் பெயர்கள்.

ஆயிரத்தெண் மூலிகைக ளாவனபொற் சிந்திலொடு
பேயினுட சிந்தில் பெருவேம்பு - வாயினிக்கும்
வேம்புகரு வேம்புமலை வேம்புநில வேம்புநல
வேம்புகறி வேம்புசிவன் வேம்போடு - பூம்புல்லாங்
கோரைதண் டாமரையாங் கோரை முதலைப்பேர்க்
'கோரையு மீருள்ளித் கோரைதாட் - கோரை
பனைக்கோரை பூங்கோரை பாய்க்கோரை நல்ல
சுனைக்கோரை வாட்கோரை சூர - லனையபுற்
கோரையு மூக்கொற்றிக் கோரை சடாமாஞ்சிற்
கோரை யிலாமிச்சங் கோரைநற் - சீரகமாம்
கோரையும் வெட்டி வேர்க் கோரைவ சம்புசம்புக்
கோரைகள் ளிக்கோரை கூந்தலாங் - கோரை
சிலந்தியரி சிக்கோரை சீப்பென்ற கோரை
பலமாந் திரட்கோரை பச்சை - நலவண்ணக்
கோரை நெறிக்கோரை கூரியதந்தப் பேர்க்
கோரைசம் பங்கோரை கூர்சருக்கங் - கோரை
மயிர்க்கோரை நல்ல வரிக்கோரை பெட்டிப்
பெயர்க்கோரை நெட்டிமட்டைப் பேரா - முயற்கோரை
செந்தொட்டி யுங்கருப்புச் செந்தொட்டி நாயுருவி
செந் நாயுருவி சிவகரந்தை - பந்நா
கணையோன் கரந்தை யருணன் கரந்தை
சுணையாங் கரந்தை சுதர்கட் - கனையாங்
கரந்தையுமெட் கொட்டைக் கரந்தையுங் குத்துக்
கரந்தை கரைக்கரந்தை கந்தக் - கரந்தையுமுட்
கத்தரியி ரண்டுகண்டங் கத்தரிசின் னம்பெரிதாம்
கத்தரியும் ரெண்டு கழற்கொடியுஞ் - சித்திரமாம்
மூலத்தில் வெள்ளை முழுக்கறுப்புச் செவ்வணமுஞ்
சீலமாம் நாரி சிலைநாரி - கூலமெனும் (94)

பாகல் மிதிபாகல் பார்ப்பாகல் நாயென்ற
பாகல் பழுவமாம் பாகலொடு வாகான
காய் வேளை முள்ளான காய்வேளை யுங்கொள்ளுக்
காய்வேளை தூதுளை நன் காம்வேளை-நாய்வேளை
பேய்முன்னை காரான் பெயர்முன்னை கான்முன்னை
தூய்கதிர முங்கிஞ் சுகக் கதிர-மாய்கதிரம்
வட்டக் கிலுகிலுப்பை வாலாங் கிலுகிலுப்பை
முட்டி யிரண்டுகுமிழ் மூன்றோடு தட்டப்
பயறுபெரு மொச்சைப் பயறு முழுந்துப்
பயறுமூஞ் சூர்மொச்சை பாசிப்-பயறு
மிடுகொள் பணிப்பயற்றின் னிப்பயறுஞ் சின்ன
விடுகொள் பெரிய விடுகொள் ளொடு பேய்ப் கொள்
நற்கௌட விக்கொள்ளு நன்றுஞ் சரக்கொன்றை
முட்கொன்றை யோடு முளரிமிகும்-பொற்கொன்றை
மந்தாரைக் கொன்றை மயிர்க் கொன்றை வேங்கையுகி
ரந்தப் பெயர்க் கொன்றையடோடு-சந்தமிகும்
பொன் மயிர்க் கொன்றை பொலிவா மலர்க்கொன்றை
சின்னதாங் கொன்றை சிவந்த மயிர்க்-கொன்றையுமுள்
வெள்ளரிநல் வெள்ளரியு மேதினியு காவுமுகா
வெள்ளுகைசின் னுருவுகை வெள்ளைநீர்-முள்ளியுஞ்செம்
முள்ளிகறி முள்ளிநீர் முள்ளிவற முள்ளிகர
முள்ளி யடுக்கான முள்ளிநதி-முள்ளியுஞ்சித்
தாமணக் குப்படுகை யாமணக் குப்பெரிய
வாமனக் குப்பறங்கி யாமணக்கும்-பூமணப்போ
னுமணக் குங்கடலி னுமணக் குங்குவட்
டாமணக் கோடுபுல் லாமணக்கு-மாமணியா
மாமணக்கே ரிக்கரைக்காட் டாமணக்குச் சேவண்ண
வாமணக் காறுபத் தாங்கொட்டை-யாமணக்குங்
காட்டா மணக்கழிஞ்சில் காரழிஞ்சி லேறழிஞ்சில்
காட்டாத் தியுமாத்தி கல்லாத்தி-காட்டுத் (109)

தகரை கறுப்புத் தகரை வெளுப்பாந்
தகரைபுன் னைவழையுஞ் சத்தத் - தகடரவும்
தேற்று சவத்தேற்று தேவ தருசரன
தேற்றுரு கீழ்க்காயாம் செந்நெல்லி - மேற்காய்கொள்
நெல்லிகரு நெல்லிகொடி நெல்லி சிவப் பாங் கீழ்க்காய்
நெல்லியரி நெல்லிகான் நெல்லியுநன் - நெல்லியுந்தே
மாதுளையு மாமிலமாம் மாதுளையுங் கொம்மட்டி
மாதுளையுஞ் செங்கரும்பு வால்க்கரும்பு - கோதுக்
கரும்புங் கரும்பு கபித்தநன் மண் நீராம்
வருக்கக் கபித்தம் மருக்குங் - குருகா
மெருக்குப் பெரிய வெருக்குப்பொற் கையான்
கருப்புக்கை யானற் கரிப்பான் - கருப்பான
தக்காளி யுங்குட்டித் தக்கா ளியு மெருமைத்
தக்காளி யோடுமணித் தக்காளி - மிக்காஞ்செங்
குன்றிகருங் குன்றிவெண் குன்றியுங் குன்றுறையுங்
குன்றியிரு காக்கணமும் கோள்த்துளசி - குன்றத்
துளசி சிவப்பாந் துளசிகற்பூரத்
துளசியுங் காட்டுத் துளசி - யளக்கர்த்
துளசி வபரிதாந் துளசி யானர்
துளசிகுக் கற்றுளசி தோகத் - துளசிபெரு
முள்ளங்கி யுஞ்சின்ன முள்ளங்கி யோடாற்று
முள்ளங்கி வெண்காய மோடுவெள் - ளுள்ளிநறி
வெண்காய முங்காட்டு வெண்காயம் வெள்ளைநிற
வெண்காயங் கானகத்து வெள்ளுள்ளி - வெள்ளையாம்
நொச்சிகரு நொச்சிநீர் நொச்சி தென்னை மரமும்
பச்சிளநீர்த் தென்னை பசுமஞ்சட் - கச்சிளநீர்த்
தென்னையுஞ் செவ்விளநீர்த் தென்னை யடுக்கிளநீர்த்
தென்னைகுண் டற்கச் சிளநீராந் - தென்னை
கருவிள நீர்த் தென்னையுங் கௌரி யிளநீர்த்
தருசோற் றிளநீர்த் தருவுங் - கருப்பா
மறுகுநல் வெள்ள றுகு மானையறுகுப்
பறுகுமகத் தீச ரறுகாஞ் - சிறிய (125)

வறுகும் பவள மறுகுநற் கூந்த
லறுகு மிரண்டுவகை யாணி - சிறியதாஞ்
செண்பகநற் செண்பகமுஞ் செவ்வந்தி குங்குமமாம்
வண்ணச் செவந்தியொடு வால்ச்செவந்தி - வண்மையா
மாரைசெவ் வாரைநீ ரார புளியான
வாரைகல் லாரைமா வாரைகா - யாரையுஞ்சிற்
ருலித்தி யால்கொடியா மால்குருவால் கல்லான
வாலோ டரசுகொடி யாமரசு - பால்வண்ண
மாமரசும் பூவரசு மௌவ லதன் பேத
மாமலருங் கோலி மலைக்கோலி - யாமிலமாம்
மூந்திரிகை யோடுநன் முந்தி ரிகைமதுக
முந்தி கிரிமதுக மோடுநற் - றந்தி
எலுமிச்சை யுங்காட் டெலுமிச்சை நான
வெலுமிச்சை வல்லி எலுமிச் - செலுமிச்சை
யோடு பலாசுமுள் ளுப்பலா சும்புன்கி
னோடாயில்ப் புங்கிருகல் லூறியும் வாடாக்
குறிஞ்சி பெரிதாங் குறிஞ்சி பவளக்
குறிஞ்சி யுயர்வாங் குறிஞ்சி - சிறியதாந்
தேக்குபெருந் தேக்குகற் றேக்குக் கடம்புநற்
பூக்கடம்பு நீர்க்கடம் போடுவெண் - மைக்கடம்பு
வெள்ளையாம் நீர்க்கடம்பு வீளிபலா வீளிபெரும்
புள்ளடியும் சித்தன்னப் புள்ளடியும் - வெள்ளியாம்
லோத்திரமு மிக்குயர்வாம் லோத்திரம் பொன்னுங்காணி
யாத்து மருதுகருப் பாமருது - மோத்தைச்
செவிமருது நன்மருது செய்யக் குதிரைச்
செவிமருது மீர்பா திரியும் - புவிவாகை
மாவாகை மால்வாகை மாமலி சிற்றுமலியும்
பூவான காரை புதன்காரை - பூவென்ற
காரை யொடுகுத்துக் காரை பெருங்காரை
சூரை கறுப்பான சூரைநன் - நீரா (140)

மலரியு மீழத் தலரி சிவப்பா
மலரி குருகா மலரி - சிலம்பா
மலரியு மாற்ற லரிநற் றுருக்க
வலரியி னேடை யலரி - யலரிசிறு

தும்பியுந் தும்பிநிர்ச் சுண்டிவறட்ச் சுண்டிபேய்த்
தும்மட்டி திம்மட்டி தோடமாங் - கும்மட்டி
நற்குமட்டி காகோளி நற்சிர காகோளி
கற்சந்திராயுஞ்செங் கற்றிராய் - பெற்றித்

திராயு மிலைப்பிரண்டை தீம்பிரண்டை கோவாம்
பிரண்டை மணியாம் பிரண்டை - இரண்டு
இருளியுமா தொண்டைதூம் பென்னுமா தொண்டை
இருள்விழுதி நல்விழுதி ஈர - வருக்கை

கடுவருக்கை நல்வருக்கை கட்டுக் கொடியி
னெடுகிறுகட் டுக்கொடியினேடு - வுடைவேல்
கருவேலும் வெள்வேல் கறிக்கருணை காட்டுக்
கருணையுங் காராக் கருணை - கறிச்சுண்டை

கான்சுண்டை யுஞ்சடைச்சி கப்புச் சடைச்சியொடு
கானெள்பே ரெள்சிற்றெள் காரெள்ளும் - மேனிலையோர்
தாளி நறுந்தாளி சர்ப்பமாந் தாளியுநற்
றுளி யிசங்கிசங்க தன்குப்பி - கோழிப்

பசளை கசப்பாம் பசளையும் வெள்ளைப்
பசளையும் பேயாம் பசளை - பசளைசெம்
மந்தாரை வெள்ளையாம் மந்தாரை யுங்காட்டு
மந்தாரை கொக்கென்ற மந்தாரை - யந்தியாம்

மந்தாரை யோடு மயூரச் சிகைப் பூண்ட
துந்தாம் பிரச்சிகைப்பூண் டோடுநற் - செந்தாது
வாவாரை வெள்ளைப் பொன்னுவாரை சூரத்தின்
ஆவாரை பேயான வாவரைநல் - லாவரைவெண்

ணுவிகரு நாவிபச்சை நாவியுஞ் சூத்திரமா
நாவியுநற் கொட்டானு 'நாய்க் கொட்டான் - பாவட்டை
கோகுப்பா வட்டை கொடிக்கொத்தான் கொத்தான்முள்
ளாகு முருக்கு வெள்ளை யாமுருக்கு - வாகாங் (156)

கிளிமுருக்கி னேடு கிரிமுருக்கு வெள்ளைப்
புளிபப் பறவாம் புளிகான் - புளிபுளிசெங்

காளான் வெளுப்பான காளான் கருநிறமாம்
காளானற் பச்சைவண்ணக் காளானுங் - காளங்
கருங்காளங் காம்புவிடக் காம்புஞ்சற் பாட்சி
இருசுவசற் பாட்சி இபமா - நெருஞ்சில்
பெருநெருஞ்சி செப்பாம் பெயர்நெருஞ்சில் வஞ்சி
யரும்புளியாம் வஞ்சி யதுவும் - பொருட்பே
ருரோகணிநன் மாஞ்ச வுரோகணியும் வெய்ய
வுரோகணியு நற்கிழுவை யோடு - மிராகக்
கிழுவையுங் கார்ப்பாசங் கிஞ்சுகக்கார்ப் பாசம்
அழுகண் தொழுகண் ணதனை - செழுவே
யரிசி விளாவி னரிசிவெட் பாலை
யரிசியிரு பூசினையு மாடுஉ - வரிவை
துடரி மறுதுடரி தூயநீர்ச் சேம்பி
ஞெடுகரிய சேம்பு முயர்கல் - லடிச்சேம்
பகத்தியுஞ் சாழை யகத்தி சிவப்பா
மகத்தி யிருசித் தகத்தி - மிகப்பிறங்கு
நாறி யொடுபிடங்கு நாறியும் வேர்ப்பூலா
மாரியாம் பூலா வறட்பூலா - சீரியவெட்
பூலா முருங்கை புனமுருங்கை முள்முருங்கை
மேலோர் முருங்கையுநீள் மென்முருங்கை - பாலான
வாம்பலுஞ் சேதாம் பலேவிரற் கோவைவட்ட
மாங்கோவை யோடு மதுரமிக - வாங்கோவை
கொல்லன்கோ வையப்பைக் கோவை பனங் கோவை
நல்நா மக்கோவை நன்னெய்த - லல்நெய்தல்
செங்கழுநீர் பானலொடு சித்திஞ்சு பேரீஞ்ச
துங்கண்ணுப் பூளையிரண்டோடுகிடை - யங்ஙன நற்
சாலிப்புல் பொன்வண்ணச் சாலிப்புல் வெள்ளையாஞ்
சாலிப்புல் லுஞ்சிவப்பாஞ் சாலிகருஞ் - சாலியின்புல்
காட்டுச்சா லிப்புல்லுங் கற்சாலிப் புல்லுமிக
நீட்டமாங் கம்பம்புல் நேர்கம்பு - மூட்டமாங்
கம்பம்புல் லோடு கருந்திணைப்புல் நற்றிணைப்புல்
லும்முத்துச் சோள மொடுசோள - மவ்வரகம். (173)

புல்லும் வரகென்ற புல்லுநற் கோதுமைப்புல்
வல்ல விருங்கம்புல் மத்தங்காய்ப் - புல்லளத்துப்
புல்லிரத்த கோமாறிப் புல்லிலைப்புல் கற்பூரப்
புல்லொட்டுப் புல்கடுக்கன் புல்லுகணப் - புல்லுமூர்ப்
புல்லு கழிமுட்டான் புற்கழிப்புல் காவட்டம்
புல்லுகதிர்ப் புற்கமரிப் புல்மாந்தப் - புற்குசையாம்
புல்லுகுடைப் புல்குஞ்சப் புல்லுசடைப் புல்லுவனப்
புல்லு சரப்புற் றுணைப் புற்சாமைப் - புல்லு
முயற்புல் முசுறுப்புல் மூங்கிற்புல் பீனசப்புல்
லுயர்நிலத்தோர் புல்லீ சுரப்புல் - லுயர்சோதிப்
புல்லோடு நான்முகமாம் புல்லுவிசு வாமித்ரப்
புல்லுநற் றண்டையம் புற்சம்பம் - புற்பீசப்
புல்லு மறுக்குராய் புற்கோழிக் காற்புல்லும்
வல்லதாம் வேர்க்கொம்பு வாசனையாம் - புல்லோடு
தந்திரிப் புல்லுங்கச் சற்புல் நறும்பிசினி
யுந்திருவட் டம்பிசினி யோடுநற் - செந்துவரை
காட்டுத் துவரை கருந்துவரை பேய்த்துவரை
நாட்டுத்துவரை நலவணுமூ - லாடகங்கற்
பாசிபழம் பாசியிலைப் பாசிகொடிப் பாசிகடற்
பாசியும் முட்டையாம் பாசிகுழற் - பாசிநன்னீர்ப்
பாசி வழுக்கை யெனும் பாசி நிம்பப் பாசிநதிப்
பாசிவே லம்பாசி பாற்குருந்து - மாசில்லாக்
கந்தக் குருந்து மயிற் காற்குருந்துஞ் சீர்குருஞ்சா
வுந்தன்ன மல்குருஞ்சா வூரவரை - யுந்துாய
வெள்ளவரை பேயவரை வேணவரை தீவாந்திர
முள்ளவரை யுயர்கறியாம் - நல்லவரை
செவ்வவரை காட்டவ்வரை சின்னவரை கோழியா
மவ்வவரை யம்மாம்பச் சரிசியதிற் - செவ்வண்ணம்
வெள்ளைசின் னம்பெரிதா மிவ்வகையும் பூம்பாலை
வல்லியாம் பாலை மடுப்பாலை - வெள்ளமாம்
பாலை திருநாமப் பாலை பழமுன்னிப்
பூலையு மேலிலையாம் பாலைவெப் - பாலையொடு (189)

குண்டலப் பாலை கொடிப்பாலை பூசியா
நுண்பாலை சிங்கியென்னும்பாலை - சுண்டைக்

கடலை கடிக்கடலை கார்க்கடலை பூமிக்
கடலை யொடுதிருகு கள்ளி - கொடியான

கள்ளியிலைக் கள்ளிசதிர்க் கள்ளிசிவப் பாஞ்சதுரக்
கள்ளி யறுமுகமாங் கள்ளிமடைக் - கள்ளிமுயற்

காது வடிவமாங் கள்ளிமஞ்சிக் கள்ளியுமான்
காதுநற் கள்ளியுஞ்செங் கன்னியுங் - கோதில்

அலகுப் பனைகூந்த லாம்பனைநற் றுளி
யுலகுப் பெயர்ப்பனைக ளோடு - முலக்கைச்

சுரைகின் னரமாஞ் சுரையினெடு கும்பச்
சுரைபேய்ச் சுரைநற் சுரத்தின் - நரந்தமுநன்

நாரத்தை யாமிலமாம் நாரத்தை யோடுகடார்
நாரத்தை யுங்கொழுஞ்சி நாரத்தை - சாரமிகும்

கிச்சிலியுஞ் சின்னக் கிளாபெரிய தாங்கிளாவும்
மச்ச களாவோடு மத்துநற் - பொச்சையாம்

ஊமத் தடுக்கூமத்தோடு கருமத்துப்பொன்
னூமத்து பேய்மத்த தும்மருளாம் - ஊமத்துஞ்

சின்னி சிறுசின்னி சீர்ப்புடலை பேய்ப்புடலை
மன்றிப் புடலை படுப்புடலை - நன்றுங்

கொழுஞ்சியும் முள்ளாங் கொழுஞ்சிநல் வெள்ளைக்
கொழுஞ்சி தமரத்தை குப்பைச் - செழுங்கீரை

நற்கீரை யோடு நறுநெய்ச்சட் டிக்கீரை
புற் கோரைக் கீரை புளிக்கீரை - நற்பசலிக்

கீரை யொடுகலவைக் கீரையரி வாள்மூக்குங்
கீரை குதிரையடிக் கீரையுவெண் - கீரைபேய்ப்

பாச் சொற்றிக் கீரை பருப்புநற் கீரைதீம்
பாச் சொற்றி யோடுதுடுப் பாங்கீரை - மிச்சிறிய

கீரை யுளிச்சிறிய கீரையிலச்சக்கட்டைக்
கீரை முசுட்டையாங் கீரையுமுட் - கீரைவெண்

சுண்ணக்கி ரைசாவற் சூட்டுப்பண் ணைக்கீரை
புண்ணுக்குக் கீரை பொதினவு - நன்மணலிக் (205)

கீரை விழுதியாங்கீரை தொயிலியெனுங்
கீரையு நற்பரட்டைக் கீரைபுண் - கீரையொடு
சக்கரவர்த்திக்கீரை தாடக்கருப்பேர்க்கீரை
முக்குளிக்கீரையுநன் மூடிகக்கா - துக்கீரை
காசியெனுங் கீரையரிக் காய்ப்பொருணீற்றுபச்சை
மாசியாம்பச்சை மலைப்பச்சை - வாச
மருக்கொழுந்து காட்டு மருக்கொழுந்து காயத்
தருதூப தீபத் தருவுந் - துருக்க
மரமுநன் மல்லிகைகாள் மல்லிகையினோடு
அரவுப்பேர் மல்லிகையு மந்த - வரத்தப்பேர்
மல்லிகையும் வாடாத மல்லிகையு நீள்கொடியா
மல்லிகையி னோடடுக்கல் மல்லிகைமா - மல்லிகைநல்
லூசியா மல்லிகையி னோடுகுட மல்லிகையும்
வாசமிகுமந்தி மாலிகையு - மாசிலிறை
மல்லிகையுமாத்தி மல்லிகையி னோடிர்க்கு
மல்லிகைநல் லோமமண வல்லிச்சி - வல்லி
மிளகாய் குடமிளகாய் வெண்மிளகாய் சீன
மிளகா யதுக்கு மிதுக்கு - மிளநங்கை
மூத்தநங்கை கோங்கிலவு முள்ளிலவு நற்றும்பை
பேய்த்தும்பை வாலோய் பேர்த்தும்பை - மாத்தும்பை
கோபுரத்தும்பையுட் குந்தும்பை நல்வாழை
மாபுரவ வாழைசெவ் வாழையொடு - பூபொலிவாம்
வாழை கருப்பூர வாழை மகரமெனும்
வாழை மலைவாழை வல்லகல் - வாழையொடு
பேய னெனும் வாழை பெருவாழை கார்வாழை
தூயநிலத் துத்தியு நற்றுத்திவா - லேயப்பேர்த்
துத்திசிறு துத்திசெடித்துத்தியோ டைந்திதழாந்
துத்திகண்டு துத்திபெருந் துத்தியெட்டுத் - துத்தி
யுதரப்பேர்த் துத்தி யொடுநாமத் துத்தி
யதவெனு நல் லத்திநி ரத்தி - பதலைப்பே
ரத்திதீ வாந்திரத் தத்திகொடி யத்திபே
யத்தியி னோடுழ லத்திநல - வித்தியொடு (221)

செந்தாழை வெண்டாழை தீம்பரங்கித் தாழைமை
யின்றாழை கொய்யாபா லின்கொய்யா - நன்னாவல்

வெள்ளையாம் நாவல் மிறைநாவல் நீர்நாவல்
முள்ளுள்ள நாவல் முழுமதுர - வள்ளிமர

வள்ளி கறி வள்ளியாள் வள்ளிகரு வள்ளிகான்
வள்ளிதொட வாடிநின்றால் வாடியும் - வெள்ளையாந்

தாமரைசெந் தாமரைகற் றாமரையு மோரிதழாந்
தாமரையி னோடுவெளித் தாமரைவான் - றாமரையும்

பேய்ப்பீர்க்கு நற்பீர்க்கு பேனப்பீர்க் கோடுமிரி
தூய்நீ ருமிரி துறையுமிரி - காய்சூ

ருமிரி நிலவுமிரி யொட்டுமிரி யும்பே
ருமிரி யவுரியிரண் டோடு - மமிழ்திலுறை

கன்னிகொட்டி யோடுகுருக் கத்தியும் பேருழா
சின்ன வுழாவுநற் செம்பரத்தை - நன்றுண்ணுந்

தேமா புளிமாவுந் தீங்கொடிமா வோங்குதரு
வாமா புளியா மரணைமிள - காமரணை

வெந்தோன் றியுநன் மெருகன் கிழங்காச்சா
வுந்திலகத் தாரு வுசிலடம்பு - முந்திரியாந்

தாருப் பிலாங்கொடிகூத் தன்குதப்பை யொட்டொட்டி
நீர்மேல் நெருப்புவன் னித்தருநன் - நீர்க்குளிரி

நின்றிடந்தீய்ந் தான்மீ னெரிஞ்சான்பூ டும்பிளவை
கொன்றான் பூடின்பூரல் கோங்குமரம் - பன்னடை

வில்வ முருத்திராக்கம் வெட்சிச் செடிகாக்காய்
கொல்லி சிவதை குறுந்தொட்டி - புல்லூறி

வாதம டக்கிதலை வாங்கிதேங் காய்ப்பூண்டுஞ்
சீதமரஞ் சூரியகாந் தீமேக - நாதப்பூண்

டுஞ்சொக் கிளிவெளவா லோட்டிப்பூண் டும்பொறிப்பூண்
டுஞ்சுழுக்கு நாயகங்க மூக்காணி - யுஞ்செம்பை

கற்கரிபத்ராட்சை காயா வொடுவடக்கி
பற்படா கந்துரிஞ்சில் பார்ப்பைமர - நற்புரசுங்

கிரிபுரண் டான்கிரந்தி கேள்வன் சுடுதுரத்தி
மாரிமிட் டானேல வாலுக்ம்பி - டாரமுக்கி (237)

பொன்முசுட்டை மூக்குரட்டை பூனைக்காஞ் சோறிகண் பூ
குன்ம குடோரி குழிமிட்டா - னன்முசுக்கை

யாடாதோ டைசே வகனர் கிழங்குமருள்
கோடகச் சாலை குருவிஞ்சிப் - பூடசுவ

கெந்தி மருதாணி கிரட்டை எரிசாலை
நந்தியா வர்த்தம்பூ னைக்காலி - யுந்திமிசி

யாடுண்ணுப் பாளையுத் தாமணிமா மேதை பல்லிப்
பூடு கழுதைமான் புள்ளிகணப் - பூடு

விராலி புகையிலை வெற்றிலைய சேர்கு
பிராயனிச்சை ஞாழல் பிரமி - பிரம்பு

வெளிச்சி மரங்குப்பை மேனிமுடக் கொத்தான்
குளிரி யதிங்கு குறுஞ்சூல் - மிளிரை

இருவாட்சி சிங்க மிடவகம் வேங்கை
மருவகம் ஒட்டை மலைவா - செருந்தி

பிரஸ்பரணி இங்குணம் பேரிலா மிச்சில்
பிரபுண் டரிகம் பெரிய - குரும்பை

கருக்குவாய் மூலிகொழுக் கட்டை மரநற்
குருக்குவிடத் தேரி கொகிழி - விருத்தி

பொரும்பிலிநத் தைச்சூரி புஷ்கர மூல
மிரும்பிலிவி ளாத்திவன மிட்டி - யொருக்கொம்பு

கல்லுருவி மாவிலங்கு கண்டில்வெண் ணெய்தணக்கு
புல்லுருவி நாகசிங்கி பூதணஞ்செம் - பல்லி

யரிவாள்மூக் குப்பச்சி லைதேட் கொடுக்கு
பரியங்கம் பாதிவேம் பாடல் - ஆரிமூக்கு

குத்துக்காற் சம்மட்டி கோழிமுளை யான்சதுக
முத்திருக் கஞ்செவியு மோமைநெ - பத்திகையுஞ்

செம்மரஞ் சாசிமகிழ் செவ்விறகு நாகபலை
தும்புருதீன் பூகோடா சூரியவ - லம்பளங்காய்

வன்மரை சோனகம்பூ வட்டத் திருப்பிமரா
சன்றை யிருள்விடுவ தாஞ்செடிரு - தந்தி

இதிரக் கிழங்குச் சிலந்தி குமுதை
யுதிமாறி யாமிரங்கப் பொட்டி - யொதிநல் (253)

வலம்புரி வல்லிமயிர் மாணிக்கந் தில்லை
நிலக்குரா வுஞ்சின்ன நீலி - கலம்புகு
வன்னி சமனத்து வங்காட்டுத் தீரேவல்
சின்னிக் கிழங்குமாஞ் சிப்பத்ரி - நன்னீலஞ்
சோதி யிதனைநறுஞ் சோந்திகான் மாசாளஞ்
சோதி கிருமிச் சத்துருநேய - மாதருவுஞ்
சக்கரைநேர் வாளஞ் சதாப்புமுடா வாட்டுக்கால்
மிக்கவெண் ணுகணமா வித்தருவி - ரத்தமா
மண்டலிசேந் தாடுபா வைபதும கங்கஞ்சா
முண்டணி விருட்ச முரோமமர - நன்னீழற்
சாயாத் தருசுணங்கன் ருரு மெருமையதன்
சேய்போற்கத் தப்பால தீயுமர - மாயமாம்
வல்லி பெருங் கம்பிகட்டு மாநற் றலைச்சூடு
வல்லி புளிநரளை மாமூலங் - கள்ளி
முளையான் பனிதாங்கி மூலிசம் பங்கி
புளிகரணை யுஞ்சின்னப்பூனை - கலைச் செம்பு
திப்பிலி காமணஞ்சத் திச்சாரணை நீராந்
திப்பிலியுஞ் சாரிபாதீயீகை - யிப்பார்
மதுரக்கிழங்கு மகாபத்ரி யட்டி
மதுகம்பொடு தலைநீர் வாள்முத் - ததுரெண்டு
தெல்லு மிருதசஞ் சிவனிசந் தானமுஞ்
சல்லியம்புண் டீர்க்குஞ் சமனியமு - நல்ல
கரணிகளிம் மூன்றேடு காணுயிரத்தெண்
டிரணிறையு மூலிகையி தே. (265)

பெயர்ப்படலம் முற்றிற்று.

பண்புப்படலம்

கட்டளைக் கலித்துறை.

இதுகாறு நாமருந் துற்பத் தியும்பெய ரின்விபர
மதுவு மிசைத்தோ மினிமே லவற்றி னருங்குணங்க
ளதனைச் சுருக்கி யுரைத்து மருந்துகளாக்கிடு நல்
விதங் களெல் லாமும் விரிவா யுரைப்போ மினிதுறவே (266)

இதுவரைக்கும், நாம் மருந்துற்பத்தி விவரத்தையும், அவற்றின் பெயர் விவரத்தையுஞ் சொன்னேம். இனிமேல் அவைகளின் குணங்களைச் சுருக்கமாகச் சொல்லி, மருந்தாக அவைகளையாக்கும், விதங்களெல்லாவற்றையும் விரிவாகச் சொல்லுவோம்.

தசையு மிரத்த மெலும்பு குடலுமீ ரல்கொழுப்போ
டிசைதோ னரம்பென்புள் மூளையொன் பான்று திவற் [றிலுறு
வசைநோ வெலாமு முவரசர முதல் மாநலங்கொ
ளிசைமூலி யீருகு மொன்பதும் போக்கு மெனவறியே, (567)

(மண்கூறுகிய) தசையும். (நீர்க்கூறுகிய) இரத்தமும். (கல்லின் கூறுகிய) எலும்பும். (இரவியின் கூறுகிய) குடலும். (மதியின் கூறுகிய) ஈரலும். (தீயின் கூறுகிய) கொழுப்பும். (வெளியின் கூறுகிய) தோலும். (இருளின் கூறுகிய) நரம்பும். ஒளியின் கூறுகிய) மூளையும் ஆகிய ஒன்பது தாதுக்களில்ச் சேரும் நோய்களை யெல்லாம் உவரசரமுதல் மூலிகையிருகச் சொல்லப்பட்ட, ஒன்பது வகையும் போக்குமென வுணர்க.

அறிய விரிவாய்ப் பதார்த்த குணஞ்சொல்சிந் [தாமணிப்பே
ருறுநூலு நாமுரை ரோகநிவா ரணி யுந்நிகண்ட

தறுமூவர் சொன்னது மாகுமென் றிந்நா லதுவிரிவா
யறிவிக்க வில்லைமுன் சொன்னூல் வகையெலா மாய்ந்
[துணரே. (268)

இவற்றை நன்குணரும்படி, விரிவாகப் பதார்த்த குண சிந்தாமணி யென்னும் நூலும், நாம் சொல்லிய உரோக நிவாரணிப் பொருட்டொகுதி யென்னும் நூலும், நிகண்டென்னும் பெயருடன் சித்தர்பதினெண்மர்களா லாக்கப் பெற்ற நூற்களும், உள்ளமையால், இந்நூலில் அவைகளை விரிவாய்ச் சொல்லாது விட்டனம். ஆகை யால் மேற்கூறிய நூற்களை நன்காராய்ந்து அறியவும்.

பண்புப்படலம் முற்றிற்று.

கற்பப்படலம் மருந்துவகை.

மருந்தின் வகைக ளெலாமொன்ப தாகு மணிகுழம்பு
மிருஞ்சுன்ன நீறு களங்கநெய் தூம மெழுகொடுமா
வுருவ முறையே தாளம்பூ நீர்சுக்கா னுந்தவள
மிரும்பொடு நாற்ற மினிமை மெழுகமு தின்குளமே.
(269)

மருந்தின் வகைகளெல்லாம் ஒன்பதேயாகும். அவை யாவன - மணி-குழம்பு-சுன்னம்-நீறு-களங்கம்-நெய் - புகை மெழுகு-மாவு. (இவைகள் முறையே. மண்முதல் ஒளி யீருகவுள்ள். பூதங்களின்றன்மையான வாறுணர்க) இவற்றின் உருவம் முறையே. மணி, முத்தினையொப்ப வும். குழம்பு, பூநீர், போலவும். சுன்னம், சுக்கான் போலும், நீறு, வெள்ளைப்பாசாணம் போன்றும். களங் கம், இரும்பை யொத்தும், நெய், கந்தக நேராகவும். புகை, இரசம், அன்னதாயும். மெழுகு, மெழுகையே யொத்தும். மாவு, சீந்திற் சருக்கரை போன்றும், இருக்கும்.

மணியின் பிறப்பு வகை.

மேலாங் குணஞ்சேர் மணியின் பிறப்பை விரித்துரைக்க
நாலுமஞ் சாகும் புதைத்துங் கரைத்து நனியுடைத்துஞ்
சால வெதுப்பியுந் தேய்த்து முருக்கியுஞ் சாரவைத்துங்
கோல முறவிளைவித்து மெடுப்பர் குளிகைகளே. (270)

உயர்வுமிக்க தன்மையுள்ளதாய, மணிகளின் பிறப்பை விவரித்துச் சொல்லில் அவையும் ஒன்பதேயாம். அஃது புதைத்து யெடுக்கும்மணி, கரைத்து எடுக்கும் மணி, உடைத்து எடுக்கும் மணி, வெதுப்பி எடுக்கும் மணி, தேய்த்து எடுக்கும் மணி, உருக்கி எடுக்கும் மணி, சாரணை செய்து எடுக்கும் மணி, விளையவைத்து யெடுக்கும் மணிகள் ஆம்.

இவற்றிற் கிலக்கியம்.

(1) புதைத்து, எடுக்கும், மணி, யானைக்கொம்பு, எலும்பு.

(2) கரைத்து, எடுக்கும், மணி, வெடியுப்பு.

(3) உடைத்து, எடுக்கும், மணி, கல்நார், சிலைகள், [மணிகள்.

(4) வெதுப்பி, எடுக்கும், மணி, வெள்ளை, கெளரி.

(5) தேய்த்தெடுக்கும் மணி, அயம், செம்பு.

(6) உருக்கி எடுக்கும் மணி, சிங்கி, கெந்தி.

(7) சாரணை செய்து எடுக்கும் மணி, இரசம்.

(8) விளையவைத்து எடுக்கும் மணி, காயச்சரக்குகள், [உருத்திராக்கம்.

(9) மகாகுளிகைகள். ஆம்.

மகாகுளிகை இலக்கணம்

குளிகை யிவற்றுள் மகாகு ளிகையிங்கு கூறியநற்
குளிகைப் பிறப்பி னிலக்கணத் தேழிற் குதாரணமாந்
தெளிவெ னினியுட னெல்லாப் பொருளையுஞ் [சேர்த்துருக்கித்
தெளிவதாக் குந்துரி சிச்சுணஞ் சேர்த்துயர் சிங்கியதே. (271)

குளிகைகளாகிய யிவற்றுள், மகாகுளிகை யென்னப் படுவது, இங்கு கூறிவந்த குளிகைப் பிறப்பிலக்கணத் தில்ச் சொல்லப்பட்ட, ஏழாவது குளிகைக் கிலக்கியமாகிய, இனிமை என்னும் இரசத்துடன்: எல்லாப் பொருள்களை யும் ஒன்று சேர்த்து, உருக்கிச் சத்தாக்குந்தவுள்ள துரி சிச் சுண்ணஞ் சேர்ந்த, சிங்கியைக் கொண்டு.

சிங்கி யதன்றயி லஞ்சா ரணைசெய் தெடுத்துமிகத்
துங்க முறுமணி யாக்கிய தனைற் றெலேவின்னலம்
பொங்குமட் டாங்கயோ கச்சித்தி வேதை புகழ்வவன
முங்காய சித்திக ளெல்லாமுஞ் செய்வருயர்ந்தவரே 272

அச்சிங்கித் தைலஞ் சாரணையாக ஏற்றி யெடுத்து மிகவும் உயர்ந்த, மணியாக்கி யதனால் நீங்காத நலம் பெரு கும், அட்டாங்க யோகசித்தியும், இரசவாதமும், சிர்த்தி மிக்க ஆகாயகவனமும், காயசித்தி முதலியன வெல்லா மும் செய்வார் பெரியோர்கள்.

நன்மணி இலக்கணம்

உயர்வு தருநன் மணிவகைக் கெல்லா முருக்கினத்திற்
சயமாந் துரிசிவெண் காரமுழுந்துமை சாட்சிகளு
நயமா மருந்துப் பொருள்களுஞ் சாரணை நற்புனலு
முயர்வாய் முறையேயொ வொன்றுக்கெட்டாக
வுறுமிடையே 273

உயர்வுடைய, மற்றைய, நன்மணி, வகைகளுக்கு யெல் லாம் உருக்கினத்திற்றிறம் மிக்கதாகிய, துரிசி, அல்லது வெண்காரம், அல்லது உழுந்து, அல்லது குக்கில், இவற்றுளொன்றும், நல்லனவாகிய மருந்துப் பொருள் களும், விட்டுச் சாரும்படி யரைக்கும் நீரும், மேலும், மேலும், முறையே ஒன்றுக்கு எட்டாகச் சேரும் இதுவே யிடையாம்.

குழம்புப் பிறப்புவகை

சீராங் குழம்புப் பிறப்பொன் பதுவகை செப்புதுங்கேள்
நேராய் வடித்துங் கரைத்துந்தெளிவித்து நீணெருப்பி

லோராய் வெதுப்பிக் கசக்கி யுருக்கியு மூறவைத்துஞ்
சீராய் நலமுறச் சேர்த்துங் குழம்புகள் செய்குவரே. 274

புகழ்மிக்க குழம்புவகைகள், பிறப்பு ஒன்பதையுஞ் சொல்லுவோங் கேட்பீராக. வடித்தெடுக்குங் குழம்பு, கரைத்து எடுக்குங் குழம்பு, தெளிவித்தெடுக்குங் குழம்பு, நெருப்பில் வெதுப்பி எடுக்குங் குழம்பு கசக்கி எடுக்குங் குழம்பு, ஊறவைத்து எடுக்குங் குழம்பு, சேர்த்து எடுக்குங் குழம்பு, இப்படியாகக் குழம்புகள் செய்வார்கள்.

இவற்றிற் கிலக்கியம்

1. வடித்து எடுக்குங் குழம்பு, முட்டை, கிளிஞ்சில்
2. கரைத்து எடுக்குங் குழம்பு, சாரம், இந்துப்பு, சவுக்காரம்.
3. தெளிவித் தெடுக்குங் குழம்பு, கல்மதம்.
4. வெதுப்பி எடுக்குங் குழம்பு, தீமுருகல், செப்புத் தொட்டி, தாரம், கௌரி.
5. கசக்கி எடுக்குங் குழம்பு, பொன், வெள்ளி, மூவங்கம்.
6. உருக்கி எடுக்குங் குழம்பு, வீரம், துரிசி.
7. ஊறவைத்து எடுக்குங் குழம்பு, சாராயம், வெந்தயம், குங்குமப்பூ.
8. சேர்த்து எடுக்குங் குழம்பு, காயம், சாம்பிராணி.
9. மகாகுழம்புகள்.

மகாகுழம்பிலக்கணம்

செய்குவர் பூதங் களின்றன்மை யெல்லாந் [தெரிந்துணர்ந்து
துய்ய கவரியை நற்குழம் பாக்கித் தொழில்வலவர்
மெய்மை யுறவெப்பொருளுங் குழம்பாகவே யமைப்பர்
வைய மெனுநவச் சாரமுஞ் சேர மகாகுழம்பே 275

செய்வார்கள் பூதங்களின் குணம் எல்லாமுந் தெரிந்த அறிஞர்கள், துத்தத்தைக் குழம்பாக்கி, அதனுல்ச் செய்முறை தெரிந்த திறமையாளர்கள் எல்லாப் பொருள்களை

யும் குழம்பாக ஆக்குவர், தேரென்னும் பெயரையுடைய நவரச்சாரமுங் கூடலால், மகா குழம்புகள் முடியும்.

நற்குழம்பிலக்கணம்

மகாகுழம் பல்லாத சாதா ரணமா மவைகளெலா
வகைகட்கு வேண்டுஞ் சரக்குமே ரண்ட மதின்பருப்பு
மிகையாங் கருப்பட்டி தேங்காய்க் கரியுமிவைகளெலா
வகையிடை யொன்றென் றரைகால் குழம்பா மருந்து
(கட்கே (276)

மகாகுழம்பு நீங்கியமற்ற குழம்பு வகைகளுக்கெல்லாம் மருந்துப் பொருள்கள் ஒருயிடையும், ஆமணக்க முத்துப் பருப்பு, அவ்விடையும், கருப்பட்டி, மருந்துப் பொருளிற் பாதியிடையும், தேங்காய்க் கொட்டாங்கச்சிக் கரி காற் பங்கு யிடையுமாகச் சேரும்.

சுண்ணப்பிறப்புவகை

உயர்வுறுஞ் சுண்ணப் பிறப்பொன் பதுவகை யோது
வங்கே
ளியல்பா யரைத்துக் கரைத்து வெதுப்பி யிடித்துரைத்து
மயவா கனனுற வாக்கிப் புகைத்து மரிலறவே
செயமுறச் சேர்த்துஞ் செய்குவர் மாசுணஞ் சீர்பெறவே
(277)

மேன்மையாகிய பொடி வகைகளின், பிறப்பு ஒன்பது வகையையுஞ் சொல்லுவோம் கேட்பீராக. முயற்சியுடன் அரைத்து எடுக்கும் பொடி, கரைத்து எடுக்கும் பொடி, வெதுப்பி எடுக்கும் பொடி, இடித்து எடுக்கும் பொடி, உரைத்து எடுக்கும் பொடி, தீயிற் சேர்த்து எடுக்கும் பொடி, புகைத்து எடுக்கும் பொடி, சேர்த்து எடுக்கும் பொடி இப்படியாகப் பொடி வகைகள் உயர்வுறும்படி செய்வார்கள்.

இதற்கிலக்கியம்

(1) அரைத்து எடுக்கும் பொடி, காந்தம்.
(2) கரைத்து எடுக்கும் பொடி, சவட்டுப்பு.
(3) வெதுப்பி எடுக்கும் பொடி, கற்பூரச் சிலை. கல்நார்.
(4) இடித்து எடுக்கும் பொடி, புத்தொட்டி (சுக்கான்
(5) உரைத்து எடுக்கும் பொடி, வெண்கலம், பித்தளை.
(6) தீயிட்டெடுக்கும் பொடி, துரிசி.
(7) புகைத்து எடுக்கும் பொடி, சூதம், பூரம்.
(8) சேர்த்து எடுக்கும் பொடி, சுக்கு.
(9) மகாசூர்ணங்கள்.

மகாசுண்ண இலக்கணம்.

சீர்பெற மாசுணஞ் செய்குவர் பூதத் திறமுணர்ந்து
தேர்ந்த வறிஞர்க ளம்முறை தாளகத் தின்குளிகை
சேர்த்துமுன் றுத்தக் குழம்புபின் கூட்டிச் செயமிகவாய்ச்
சார்ந்திட வெல்லாப் பொருளையுஞ் சுன்னமதாக்கு வதே,
(274)

புகழ்சேர மகாசுண்ணஞ்செய்வார்கள், பூதத்தன்மை யறிந்த தெளிவுமிக்க அறிவுடையோர்கள், அந்தமுறை யாவது, தாளகக் குளிகையை முதலிற்கூட்டி, இரண்டாவ தாகத் துத்தக் குழம்பைக்கூட்டி, எல்லாப் பொருள்களை யுஞ் சுண்ணமாக்குவதாம்.

நற்சுண்ண இலக்கணம்

ஆக்குவர் மற்ற வகைச்சுண்ணமெல்லா மதிகநல
மேக்கொளும் நீருற வாக்கிப் பொடிசெய்வர் மேன்மையுறச்
சேர்க்கு மெடையெட்டு மொன்றுமவ் வோரிடைசீர்பெருக
வாக்குஞ் சரக்கெலாங் கூட்டநிரனிறை யாம்வகையே
(279)

செய்வார்கள், மற்றைய சுண்ணங்க ளெல்லாம், நற் குணமீயும் நீர்வகைகள் சாரும்படியாக, மருந்துப்பொரு

ளிற் சாரணை செய்து, பொடியாகச்செய்வார்கள். அதற்கு எடையாவது, முறையே சாரணை நீர் எட்டெடையும் மருந்துப் பொருள் ஓரிடையும் ஆம்.

நீறு களங்கம் நெய் இவைகளின் பிறப்புவகை

மேன்மையாம் நீறு களங்கநெய் மூன்று மியைபுடனே
தோன்றும் வகையொன் பதுகேள் மறையவைத் தும்
[நணைத்து
மூன்றி யுடைத்தனல் வாட்டி வறுத்து முறவெரித்து
மேன்று புகைத்து நன்றுய்ச்சேர்த் தெடுப்ப ரெரியதிலே
(240)

உயர்வாகிய நீறு, களங்கம், நெய், இம் மூன்றும் முறையே பிறக்கும் வகையொன்பதையுங் கேட்பீராக. மறைவுப்புடமிட்டும், நணைத்துப் புடமிட்டும், உடைத்துப் புடமிட்டும், வாட்டிப்புடமிட்டும் வறுத்துப்புடஞ்செய்தும் எரித்துப் புடஞ்சேர்த்தும், புகையாம்படி புடஞ்செய்தும், சேர்த்தும் எடுப்பார்கள்.

நீறுகளின் இலக்கியம்

1. மறைவுப்படம் போட்டு எடுக்கும் நீறு, பூநாகம், இந்திரகோபம்.
(2) நணைத்துப்புட மிட்டெடுக்கும் நீறு, சாரம்.
(3) உடைத்துப் புடமெட்டெடுக்கும் நீறு-காவி-செங் [கல்-ஓடு.
(4) வாட்டிப் புடமிட்டெடுக்கும் நீறு, லிங்கம்,
(5) வறுத்துப் புடமிட்டெடுக்கும் நீறு, அயம், மூவங்கம்
(6) எரித்துப் புடமிட்டெடுக்கும் நீறு, வெள்ளை,
(7) புகைத்துப் புடமிட்டெடுக்கும் நீறு, இரசச் செந் (தூரம்
(8) சேர்த்து எடுக்கும் நீறு, கூகை நீறு.
(9) மகாபற்பங்கள்

களங்கங்களின் இலக்கியம்

(1) மறைவுப் புடக் கரி - ஆமையோடு.
(2) நணைத்துப் புடஞ் செய்கரி - காய்ச்சுலவணம்.

(3) உடைத்துப் புடஞ் செய்கறி - அஞ்சனக்கல்
(4) வாட்டிப் புடஞ்செய் கரி - கார்முகில்.
(5) வறுத்துப்புடஞ்செய் கரி - செம்பு.
(6) எரித்துப் புடஞ்செய்கரி - அயத்தொட்டி.
(7) புகைத்துப் புடஞ்செய் கரி - காடிக்காரம்.
(8) சேர்த்து எடுக்கும் கரி - வசம்புக் கரி.
(9) மகாகளங்கங்கள்

நெய்களின் இலக்கியம்

(1) மறைவுப்புட நெய் - நண்டு.
(2) ஈரப்புடநெய் - சூடன்.
(3) உடைத்துப்புடஞ்செய் நெய் - கல்மதம்.
(4) வாட்டுப்புடநெய் - கந்தகம்
(5) வறுப்புப் புட நெய் - மூவங்கம்.
(6) எரிப்புப்புட நெய் - தாளகம்.
(7) புகைத்துப் புடஞ்செய் நெய் - வெடியுப்புத்தீ நீர்.
(8) சேர்த்து எடுக்கும் நெய் - சேங்கொட்டை.
(9) மகாதைலங்கள்.

நீறு இலக்கணம். களங்க இலக்கணம்.

அதிநல மாநீறு நாதாக்கள் மெச்சு மருவழலை
யதிநீறு கூட்டியெல் லாநீற தாக வமைத்திடுவ
ரதின்முறை சாரகா ரங்கூட்ட நீருங்களங் கமைக்கும்
விதிமுறை காரசாரங்கூட்ட லாகு மியைபிதுவே. (281)

மிகுநன்மைதரும் நீற்றினங்கள் எல்லாமும், சித்தர்கள் கொண்டாடும் சவுக்காரச் சுன்னத்தாலாம். அவ் வழலைச் சுன்னமொன்றால், எல்லாப் பொருள்களையும் நீருகும் படி செய்வார்கள். அம்முறையானது சாரகாரங் கூட்டில் நீருகும். மாறிக்காரசாரங் கூட்டிற் களங்காக அமையும்.

நன்னீறு இலக்கணம்.

இயைபுடன் மற்ற வகைநீற தெல்லா மிடைக்கிடையே
இயைபுடன் நாற்ற முறவாய்ப் புடமிட் டெடுத்ததனி

லியல்புநற் றன்மையுண் டாகவீ ரஞ்சின மிட்டழலி
லியல்புறச் சேர்ப்பித் தெடுப்பர் நீருக விினிதுறவே. (282)

வாய்ப்புடன் மற்றைய நீற்றினங்களெல்லாம், நீருக்க வேண்டிய பொருளின் இடைக்குச் சரியாகக் கெந்தகங் கூட்டிப்புடமிட்டுப் பின்னர், களங்கம் மாறி நற்றன்மை யுண்டாக, வீரஞ்சினம்சேர்த்துப்புடமிட்டு,நீருக எல்லாப் பொருள்களையும் ஆக்குதலாம்.

நற்களங்க இலக்கணம், மகா நெய்யிலக்கணம்.

இனிதாய்க் களங்கங்க ளிம்முறை மாறலி னேற்படும்பா
ரினிமகா நெய்யெலாங் காரசா ரங்க ளிடைமுறணி
லினிது முடியுமைம் பூதத் திறங்க ளெலாமுணர்ந்தோ
ரினிதுறச் செய்யு முறையெலாங் கண்டி திசைத்தனமே. (283)

நன்றுய்க் களங்கங்க ளெல்லாம், மேற்கூறிய முறையையே மாறிச் செய்தலா லேற்படும், (மாறிச் செய்தலாவது, முதலில் மருந்துப் பொருளின் யிடைக்குச் சரியாய் வீரஞ் சினஞ் சேர்த்துப் புடமிட்டுப் பின்னர், கெந்தகங் கூட்டிப் புடமிடலாம்) மகாநெய்களெல்லாம். நீறுசெய்யற் குச் செய்யும் காரத்தையும் சாரத்தையும் அதிற் கூட்டுஞ் சரக்குகளை எடைமாறிக் கூட்டி வைத்துக் கொண்டு சேர்க்கில் எல்லாச் சாக்குகளும் தைலமாம். ஐம்பூதச் செயல்வகை யெல்லாம், நன்கறிந்தோர் நன்றுக்ச்செய்யும், முறைகளெல்லாவற்றையுங் கண்டு, இவ்வுண்மையைச் சொன்னோம்.

நற்றயில இலக்கணம்.

மேலு முலகோ ரெலாஞ்செய் தயில விலக்கணங்கேள்
நாலிடை சாறல் லதுகிழா யங்கூட்டி நாலிலொன்றுங்
காலிடை நெய்யுமந் நெய்நாலுக் கொன்றிடை கற்கமதுஞ்
சாலவே சேர்த்தெரி யிட்டு வடிப்பர் தயிலமதே. (244)

இன்னும், உலகத்தினர் எல்லாஞ்செய்யுந் தயில இலக்கணஞ் சொல்லுவோங்கேளீர். சாறு அல்லது கிழாயம் நாலுயெடை கூட்டி, அதற்கு நாலில் ஓரெடை வேண்டியநெய் கூட்டி, அந்த நெய்யின் எடைக்கு நாலில் ஒரு பங்கிடை கற்கச்சரக்குகள் கூட்டி, நெருப்பில் பாகஞ் செய்து வடித்து எடுப்பது தைலமாம்.

மகாபுகை செந்தூரவுற்பத்திவகை.

மகாபுகை யானசெந் தூரவுற்பத்தி வகுத்துரைப்போ
மிகவே யரைத்து வறுத்தும் பொடித்தனல் மிக்கவரும்
புகையாயுந் தேய்த்து முருக்கிமறைத்தும் புனிதமுறும்
வகையாகச் சேர்த்து மகாபுகை செந்தூர மாக்குவரே.
(285)

மகாபுகையென்னுஞ் செந்தூரவுற்பத்தியை வகுத்துச்சொல்லுவோம். அரைத்து எடுக்குஞ் செந்தூரம், வறுத்து எடுக்குஞ் செந்தூரம், பொடித்து எடுக்குஞ் செந்தூரம், புகைத்து எடுக்குஞ் செந்தூரம், தேய்த்து எடுக்கும் செந்தூரம், உருக்கி எடுக்குஞ் செந்தூரம், மறைத்து எடுக்குஞ் செந்தூரம், சேர்த்து எடுக்கும் செந்தூரம் என வொன்பதாம்.

இவற்றிற்கிலக்கியம்.

(1) அரைத்துஎடுக்குஞ்செந்தூரம் - அன்னபேதி.
(2) வறுத்துஎடுக்குஞ் செந்தூரம் - சாரம்.
(3) பொடித்துஎடுக்குஞ்செந்தூரம் - காவி.
(4) புகைத்து எடுக்குஞ்செந்தூரம் - மனோசிலை.
(5) தேய்த்துஎடுக்குஞ்செந்தூரம் - அயம்.
(6) உருக்கிஎடுக்குஞ்செந்தூரம் - கோழித்தலைக்கெந்தி.
(7) மறைத்துஎடுக்குஞ்செந்தூரம் - காரஜெயநீர், [கெந்தித்திநீர்.
(8) சேர்த்துஎடுக்குஞ்செந்தூரம் - மஞ்சள்.
(9) மகாசெந்தூரம் - அல்லது பதங்கங்கள்.

மகா செந்தூர இலக்கணம்.

செந்தூர மாயெப் பொருளேயு மாக்குந்திர னுடைத்தாம்
அந்த முறைரச பூரமெழுகிட்ட தோடிலிங்கச்
செந்தூரமுங் கூட்ட லிம்முறைபூதச் செயல்முழுவ
துந்தேர்ந் தறிந்த வறிஞர்கள் செய்யுமுயர் முறையே.
(286)

செந்தூரமாக யெந்தப் பொருள்களையும் ஆக்கும் வல்லமையுள்ள தாகிய அம்முறையானது இரச கற்பூர மெழுகை மெழுகு செய்யவேண்டிய மருந்துப் பொருளுடன் முதலிற் சேர்த்துப் பின்னர், லிங்கச் செந்தூரங் கூட்டிப் பாகஞ் செய்யலாம். இம்முறை பூதச் செயல்வகையைமுறையே யுணர்ந்த அறிஞர்கள் செய்தலாகிய உயர்ந்த முறையாம்.

நற்செந்தூர இலக்கணம்.

முறையா யுலகோ ரெலாஞ் செய்செந் தூரமுறை [பொருளின்
நிறையினி நாற்றமுந் தாள்கங் கூட்டி நெருப்பிலுற
நிறைவாலுகையக ளுள்ளிட் டெடுத்துநன் நேர்மைமிகுங்
கறையற்ற மாந்தர்க் களித்து நோய் நீக்குவர் காணுமிதே
(287)

முறையோடு உலகோர்கள் எல்லாஞ் செய்யுஞ் செந்தூர முறையானது, செந்தூரஞ் செய்யவேண்டிய பொருலின் எடைக்கெடை இரசம், கெந்தகம், தாளகம் கூட்டி மணலடுப்பேற்றி யெரித்து எடுத்து ஒழுங்குமிக்க மாசற்ற மனிதர்களுக்கு ஈய்ந்து நோய்களை எல்லாம் போக்குவார்கள் என அறியவும்.

மகாமெழுகு உற்பத்திவகை.

மெழு கினுற்பத்திகளொன்பான் வகைநா மிதுவரைக்கு
மிழற்றுங் குளிகை முதன்மகாதூம மிறுதிபெறு
மெழுவகை யின்றெளிவுந்தெளிவின்றெளிவீ து மகா
மெழுகொடா மாமெழு கின்விப ரங்கள் விளம்புதுமே.

மெழுகின் பிறப்புகள் ஒன்பதாவன; நாம் இதுவரைக் குஞ்சொல்லிவந்த குளிகைமுதல் மகாபுகை இறுதியாகிய ஏழுவகையிலும் உள்ள தெளிவென்னும் ஏழாவது பொருள்களும் தெளிவின் றெளிபொருள்களும் மகாமெழுகோடு ஒன்பது ஆம். இனி மகாமெழுகின் விவரங் கூறுவோம்.

இதற்கிலக்கியம்.

(1) குளிகைவகைத்தெளிவு - இரசம்
(2) குழம்புவகைத் தெளிவு - குங்குமப்பூ
(3) சுன்னவகைத் தெளிவு - சுக்கு
(4) நீறுவகைத் தெளிவு - கூகைநீறு
(5) களங்கவகைத்தெளிவு - வசம்புக்கரி
(6) நெய்வகைத் தெளிவு - சேங் கொட்டை
(7) செந்தூரத்தெளிவு - மஞ்சள்
(8) தெளிவிற்றெளிவு - மெழுகு
(9) மகாமெழுகுகள்.

மகாமெழுகு நன்மெழுகு இலக்கணம்.

மேன்மையாம் லிங்கசெந்துரமும்பூர மெழுகிவற்றி
ஞன்மெழு காக்குவ ரெல்லாப் பொருளேயு மைந்திஞெடு
நான்கதாம் பூத மறிந்தவர் மற்றையோர் ஞானியிடும்
வான்கரு நேயமிட்டாட்டி மெழுகாக்கு வாரறியே. (289)

உயர்வுமிக்க லிங்கசெந்தூரத்தைக் கூட்டிப்பின்னர் இரசகற்பூரமெழுகைக்கூட்டி இவற்றிஞல் எல்லாப் பொருள்களேயும் மெழுகாகும்படி செய்வார்கள். பூதங்கள் ஐந்திஞட்பூதம் நான்கு ஆகியவொன்பதையும் அறிந்த அறிஞர்கள் மற்றையோர்கள் கோழிமுட்டைக் கருத் தைலம் விட்டுஆட்டி மெழுகாக்குவார்களென வுணர்க.

மாவு உற்பத்தி வகை.

நுரைத்திரளாம்மாவுபரசரமூலிகையொடுநா
முரைசெயொன்பான்வகை யாலா மணியே முதன்மெழுகு

வரைசொலுமெட்டிலுண்டாகுமாவோடுமகாதெளிவர்
நுரைத்திரனென்றேன் பதுவது செய்ய நுவலுவமே.
(290)

நுரைத்திரள் (வெண்ணெய்) ஆகிய மாவு உவரச முதல் மூலிகையீருக நாம் சொல்லிய வொன்பது வகைப் பொருள்களாலாகிய குளிகை முதல் மெழுகு வரையாக வுள்ள, எட்டிலும் உண்டாகும் மாவோடு மிக்க தெளிவாகிய மகாமாவுகளென ஒன்பதாம். அது செய்யும் முறையையும் சொல்லுவோம்.

மாவு இலக்கியம்

(1) மகாமணிகள் - உவரசரம்
(2) மகாகுழம்புகள் - உப்பு
(3) மகாசுன்னங்கள் - உவரசரமூலம்
(4) மகாபற்பங்கள் - பச்சைவட்டு
(5) மகாகளங்கங்கள் - பொன்வகை
(6) மகாதைலங்கள் - பச்சைவட்டுமூலம்
(7) மகாபதங்கம், செந்தூரங்கள் - ஜெயநீர் திநீர்கள்
(8) மகாமெழுகுகள் - காயச்சரக்கு
(9) சர்க்கரைகள், மாவுகள் - மூலிகை

மாவு இலக்கனம்

செய்ய தெளிவின் றிரளாகும் பாலுருச் சேரவெலாஞ்
செய்வர்முன் சொல்லு மிலிங்கமாஞ் செந்தூரஞ்
சேர்த்ததொடு
வெய்ய ரசகருப் பூரமெழுகு மெடையெதிரிட்
டுய்யும் வகைசெறி பூதக்குணந்தே ருயர்ந்தவரே. (291)

செம்மைமிக்க தெளிவின் திரளென்னும் பால்வடிவம் பொருந்த எல்லாப் பொருள்களையுஞ் செய்வார்கள். முன் சொல்லிய இலிங்க செந்தூரத்தையும் இரசகற்பூர மெழுகையும், எடைபாகம் மாறிவரும்படியாகச் சேர்த்து வேண்டிய மருந்துப் பொருள்களிற் கூட்டி உயிர்க்கலையறியும் பூதவகை முறையறிந்த பெரியோர்கள்.

நற்றவன இலக்கணம்

தவறின்றி மற்றவர் செய்முறை கள்ளித் தவளமண்டத்
தவளக் கருநா லிரண்டெடை யாய்ச்சேர்த் தமைப்ப
[ரெலாத்
தவளங் களுமுயர் வாய்நவ மாமருந் தாம்வகைகள்
தவறின்றிச் செய்யமீ ஞமிதமாயிவை சாற்றினமே. (292)

மாறுபாடின்றி மற்றையோர் வெள்ளைசெய்யும் முறையாவது அண்டவெண்கரு நாலெடையும் கள்ளிப்பால் எட்டெடையுமாகச் சேர்த்தாக்கியநீரால் எல்லாப் பொருள்களையும் வெள்ளையாகும்படி செய்வார்கள். புதுமையாகிய மருந்துகள் பிசகின்றிச் செய்யும்படியாய் மீஞமிதமாக இந்நூலுரைத்தோம். (மீஞமிதமென்பது) மீனம் ஒன்றையொன்று பற்றிச்சஞ்சரிக்கும் மீன்வடிவாகிய விராசியாம். அத்தன்மை எதன்குறிப்பெனில், பனிரெண்டாய் நின்ற வாசியின்குறிப்பேயாம். அப்பனிரெண்டில் மிக்கதாகிய மதிகலை பதினாறுகூடியபோது அமிதகதியாய் உண்டாகுங்கலை நான்கேயாம். அதனாலுண்டாம் நலமும், அளவும், அமிதம் (அளவற்றது) ஆயினாற்போன்று நாம் சொல்லிய ஐந்தின்மிக்க பொருள் நாலும் ஆக்குவதனால் இந்நூலை மீஞமிதமென்றோம்.

அறியவேண்டியவை.

சாற்றும் வகைகளறியு மறிஞர்நா தாக்களெலாஞ்
சாற்றுநன் னூலினு ளைந்தினியல் பெலாந் தாமுணர்ந்திங்
காற்றுநன் மீனவமிதமா நாலுமுன்னைந் தொடொன்பான்
ஆற்றலினாற்காய சித்தியோ கச்சித்தி யாக்குகவே. (293)

இந்நூலிற் சொல்லியவற்றையுணரு மறிஞர்கள் சித்தர்கள் எல்லோருஞ் சொல்லிய நல்லனவாகிய நூற்றெருகுப்பிலுள்ள ஐம்பூதங்களின் இயல்புகளையெல்லாம் நன்குணர்ந்து, இங்கு நாம் சொல்லிய மீன வமிதமாகிய நாலோடு முன்னைந்துங் கூடவாகிய ஒன்பதின் பலத்தாற் காயசித்தி யோகசித்தி முதலியனவாக்கவும். சித்தர் சொல்லிய நூலுள்ளறியவேண்டுவன வாவது, ஐம்பூதவியல்பு, சத்துரு மித்துரு, உப்பு, புளி, நாதம், விந்துச்

சரக்குகள், நீற்றினச்சரக்கு உருக்கினச்சரக்கு செந்தூரச் சரக்கு, வர்ணவகைச்சரக்கு, களங்கச்சரக்கு, வாத குடோரி, தசக்காரகுடோரி, வாதம் நெகிழபந்தம், ஏக மித்ரம், உபமித்ரம், திரிமித்ரம், சதுரமித்ரம், பஞ்ச மித்ரம், தசமித்ரம், திரிசத்தமித்ரம், (21. மித்ரம்) பஞ்ச சுண்ணக்குகை, சிராவணம், சரக்குவைப்பு இவைகளாம். இவைகள் செய்முறையெல்லாம் சித்தர்கள் ஆக்கிய பெரு நூல்களிற் காண்கலாம். முக்கியமாகப் போகர் ஏழாயிரத் திற் சரக்குவைப்பும், போகர்நிகண்டு ஆயிரத்திருநூறு அதன் கருக்கிடை ஐஞ்ஞூறில் பஞ்சபூதவியல்பு, உப்புப் புளிச்சரக்கு, நாதவிந்துச் சரக்கும், சத்துருமித்துருவும் அகஸ்தியர் வாதஞானசௌமியம் ஆயிரத்திருநூறில் நீற் றினம், உருக்கினம், செந்தூரவினம், வர்ணவினமும், ஏகமித்ரம், உபமித்ரம், திரிமித்ரம், சதுரமித்ரம், பஞ்ச மித்ரம், தசமித்ரம், திரிசத்தமித்ரம், அஞ்சுசுண்ணக் குகை சிராவணம், வாதம் நெகிழ பந்தம், வாதகுடோரி, தசக்காரக்குடோரி, மகாரசம், சிங்கி, இவைகள் கொங் கணர் வாதகாவியம் மூவாயிரம் என்னும் முக்காண்டத் திலும் சில சட்டைமுனிவாதகாவியத்திலும், மூலர் ஆயிரத்திலும், மச்சமுனியெண்ணூறிலும் சட்டை முனிவர் நிகண்டு ஆயிரத்திருநூறிலும், மற்றும் அனேகம் பெருநூல்களிலும் காணலாம். மேற்கூறியவைகள் அவ சியம் மருத்துவக்கலைவல்லவர்கள் அறியவேண்டுவன வாகும். அவைகள் முன்னோர்கள் நூல்கள் பலவற்றிலும் விரிவாய்க்கூறியுள்ளபடியால் யாம் அதை இந்நூலிற் சொல்லவில்லை. அந்நூல்முறைகளை நன்குணரவும்.

கற்பப்படலம்

முற்றிற்று.

ஓடுக்கப்படலம்

உண்மைக் காயத்திரி

ஆக்கம் பெருகவியம நியம மறிந்தனுட்டித்
தூக்க முடலாத னின்பயனுக வுயர்குருநன்

நோக்குற் றவரால்க் காலுநா லாகும் முபாயமறிந்
தாக்கியந் நூல்பிடித் தண்ட முகடினுற் றவ்விடத்தே.
(294)

நற்பலம் விருத்தியாக முயற்சி. (நியமம்) உடைமை. (இயமம்) இவைகளை யுணர்ந்து அம்முறை யொழுகி மனோதிடம் உண்டாகப் பெற்று, அவ்வாறொழுகிய தன் பயனாக மேன்மை மிக்க ஞானாசிரியர் அருள் நோக்கம் பெற்று அவரால் (கால் என்னும்) வாசி. (நூலாகும் உபாயம்) சிதைவின்றியும் முரிவின்றியும் கூடிவலுவாம் தந்திரம், உணர்ந்து அவ்வாறு வாசியானது பஞ்செனப் பறந் தழியாமல் கதிர் முனை என்னுஞ், சுழிமுனையில், நூலெனச் சிதைவின்றிக் கூடும் தன்மை கண்டு ஆக்கி, அப்படியாகிய நூலைப்பிடித்து (இடை, பின், சுழி, என்னும் மூன்றுங்கூடி வலுத்தவால் இதையே முப்புரி நூலென்பர்) ரவிமதி என்னுங் கலைதிரியும் அண்டமென்னுஞ் சிரத்தின் உச்சியை யடைந்து, அந்த இடத்தில் (அவ்விடம் மேலாறு தலத்தின் உச்சியாகிய மேன்மூலமாதலால், அதைப் பூலோக, புவலோக, சுவலோக, தவலோக மகாலோகங்கடந்த சத்யலோகமென்பர்.)

அவ்விடத் தேரவியோடு மதிசந்தி யாமதறிந்
தெவ்விதத் துஞ்சந்தி யுள்ளிற் றியங்கி யிடிமினலிற்
கவ்வையுறுமற் குருவருள் பெற்றக் கதிர்மதிநற்
செவ்வை யுறப்பாதலத்துப் பெருநெறி சென்றிடவே (295)

அந்த இடத்திற் சூரியன், (பின்கலை) சந்திரன், (சந்திக்கத்திரமீயும் இடை கலை) சந்தியாம் அது, (நேர் நேர் எதிராய் ஒன்று கூடல் அதுவே சுழிமுனையும் சந்தியா காலமுமாம்) உணர்ந்து எவ்வகையாலும் அந்சந்தியில் கூடும் போதுண்டாம் திகைப்பு. இடிபோன்றொலிக்கும் நாதம். மின்னல் போன்று வீசும் ஒளி யிவைகளாற்றுன்பத்தை யடையாமல் (இத்துன்ப மடைதலையே சந்தி செறித்தல் என்பர்) ஞானாசிரியனருளப் பெற்று. ரவியென்னும் பின்கலையும் மதியென்னும் இடைகலையும், செவ்வையுற, (தேய்ந்தும் முறிந்தும் அழியா நலம் பெற) இவ்வழிவையே யரக்கர் இரவிமதிக் கிடையூறு விளை

விப்பதாயுரைப்பர். பாதலத்துப் பெருநெறி சென்றிடவே, பாதம் நின்றதலம், வாசி நின்ற இடம், அதுவே பாதலம் என்னுங் கீழ் மூலமாம். பெருநெறி (பெரும்வழி) அமித மாய் வாசி செல்லலால் அப்பெயர் பெற்றது அவ்விடஞ் செல்லவும்.

சென்றிட வேமதி சிந்து மமிதநீர் நியரக்கர்
நின்ற விடந்தெரி யாதே யழிவர் நிலைத்திரவி
யென்றென்று நிற்குமீ ரேழுலோ கங்கணம் மில்லமதாம்.
நன்றதாய்க் காயம் திறம் பெற்று நின்றிட ஞாயமிதே.
(296)

செல்லவும் சந்திரன் சூரியனைக் கூடலா லெஞ்சிய கலைநான்கும் அமிதமாக. (அந்நீர் செல்லலால்) நின்ற நிலைதெரியாமல், அரக்கர் என்னுங் கலைக்கிடையூறுய தெல்லாமழிவுறும், நிலைத்து இரவி என்றென்று நிற்கும், கீழ்மூல நிலையிற் பின்கலையுரம் பெற்று எக்காலத்தும் நிலையுறும். ஈரேழு லோகங்கள் நம்மில்லம் அதாம். கீழாருதார மூலமும், மேலாருதார மூலமும் நமது மனை யாகும், நன்ற தாய்க் காயந்திரம் பெற்று நின்றிட ஞாய மிதே. நன்மையே யாய் உடலம் பலம்பெற்று விளங்க முறைமை யிதுவேயாம். காயம்திரம் உறச் செய்யலாற் காயத்திரியெனச் சொல்வர்.

சித்தர்களும், இயேசுவும், முகம்மது நபியும் சொல்லியது இதுவே.

இதனையே நாதாக்க ளெல்லோருஞ் சொன்ன ரிகத்
[தேவர்க்கு
மிதனையே சொன்ன ரியேசு கிறீஸ்து வெமதிறைவ
னிதந்தரு நாமத்தை வீணுக வுச்சரிக் கேலெனவும்
பதந்தரு நற்பரி சுத்தாவி ஞானம் படிகெனவே. (297)

இதையேதான் சித்தர் எல்லோருஞ் சொன்னர்கள். உலகத்தோர் எல்லோருக்கும் இதையேதான் இயேசு கிறிஸ்து நாதரும், தேவனுடைய நாமத்தை வீணிலே உச்சரிக்காதே என்ருர். தேவன் இவ்வுடலத்தை இயக்கு

விக்கும். இயமானன் என்னும் உயிர், அவனுடைய நாமம் வாக்கிற்கு எட்டாததாகிய உயிர்ப்பு என்னுஞ் சுவாசத் தாலுண்டாம் ஒலி. அதை வீணுக வுச்சரிக்காதிருத்தல் வாசியைப் பாழ்படும்படி செய்யாதிருத்தல் வாசியொவ் வொரு தடவையும் நாலங்குலம் வீணுதலே பாழ்படலாம். பதந்தருகும்பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம்செய்க என்றல். ஆனந்தத்தைத் தருவதும், உள்ளழுக்காகிய காமக் குரோத முதலிய வெண்வகை இராகங்களேயும் மாற்றித் அகந்தூய்மையுறச் செய்யவல்லது ஆகவும் விளங்குவது பரிசுத்த (ஆவியாம்) சுவாசமாம். அதில் ஸ்நானம் செய்தல். சுவாசம் காமமுதலிய அழுக்குகளால் முரிபட்டழிந்து அசுத்தமானதைக் குருமுகமாய்த் தெரிந்து குருவாக்கியப்படி நடத்திப் பரிசுத்தமாகச் செய்து அதனுல் உண்டாகும் அமிதக்கதியென்னும் போகாப்புனலால் உடலம் முழுகப்பாய்ச்சல் இதுவே பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறலாம்.

தேவனுடைய நாமத்தை வீணிலே உச்சரிக்காதே. என்னும் வாக்கியம், இயமம், பம்துவகையென்னும், முயல் வனபத்துவகையிற் பொய்சொல்லாதே என்னும் வாக்கி யமேயாம். அதை முன்னரே விவரித்துள்ளோம் உணர்க. பரிசுத்த ஆவியால் ஞானஸ்நானம் பெறு என்னும் வாக் கியமே முயல்வனபத்துவகையில் அழுக்காறு நீங்கித் தூய்மையடைந்து புனிதனுக எனச் சொல்லப்பட்டதாம். அதையும் முன்கூறியவாற்ருலுணர்க.

எனவுரைத் துந்தேவ நாமமெம்போது மியம்புகென் றுங்
கனமுறு மிந்தனற் சத்திய வேதக் கலேயுணர்ந்தோ
ரினம்பிற வாரென் றிசைத்தார் முகம்ம தெனுநபிநம்
மினமெலாம் வேதங்கீ ழாக்கி யிறந்தோ மெதிர்மறையே.
(298)

இவ்வாறு சொல்லியதோடு தேவனுடைய நாமத்தை எப்பொழுதுஞ் செபித்துக்கொண்டிரு என்றும் மேன்மை யுடைய இந்தச் சத்திய வேதமாகிய கலேயையுணர்ந்தவர் இன்னும் பிறவியடையார் எனச் சொன்ஞர் முகம்மது நபியும். நம்மவர்கள் எல்லாம் வேதத்தைக் கீழாக்கியதால் இறந்தோம். எதிராக்குவதே மறையாம். (என்ருர்.)

தேவனுடையநாமத்தை எப்பொழுதும் உச்சரித்துக் கொண்டிருத்தல் என்பது, உயிர்க்கலையாம் சுவாசத் தொலி என்னும் அசைபையை மாருதொலிக்கும்படி செய்தலாம். இதையே வாசிதாரணையென்றும் நியமம் பத்துவகையென்னும் உடைமை பத்துவகையிற் செபம் என்றுஞ் சொல்லப்பட்டதாம். அதன் விரிமுன்னுரைத் தோம் உணர்க. இங்கு கூறிய இதுவே எழுதாக்கிளவி என்னுஞ் சத்தியவேதம் ஆம் இதையுணர்ந்தோர் பிறவாரெனலுண்மையே. முகம்மதுநபி வேதங் கிழாக் கியிறந்தோம் எதிராகச் செய்யவே மறையாம் எதிர் வேதம் என்றது. வேதம் வேதிக்குந் தன்மை மாற்றுந் தன்மையுடையது ஆகிய வாசியாம். அது கிழாய் அதோ கெதியாய்ச் செல்லலால் மரிப்பு யேற்படுகிறது. அதை மெற்கதி, உயர்கதி யாக்கினல் ஏற்படும் தன்மையே எதிர் வேதமாம். இதையே முகம்மதுநபி சொன்னர்.

எதிராகச் செய்யு மறையோர்க் கினிப்பிறப் பில்லை [யென்று
ரிதினுண்மை யெல்லா மறந்தார்கள் நூலோரெனும் [பெயரின்
வதிவோ ரெலாம்பஞ்சை யானர்கள் பார்ப்பெனு [மண்ணவரோ
முதிய கிழமா யிருந்திறக் கின்ருர் முறையழிந்தே. (299)

இப்படி (எதிராகச் செய்யு மறையோர்) வாசிகீழ் நிலைசெல்லா தெதிராக மேலேறச் செய்யும் வேதியர். அவர்கட்கு இனிப்பிறவியில்லை எனச் சொன்னர். இவ்வாறு கூறிய வுண்மையை முழுதும் மறந்தார்கள். நூலோர் என்னும் பெயர் கொண்டிருப் போர்எல்லாம் பஞ்சையானர்கள். (நூலோர் பிரமமாணவர். பிராமணர், எனப்பெயர் வைத்துக் கொண்டு பஞ்சினூலைத் தரித்துக் கொண்டிருப்பவர்) பார்ப்பென்னும் பெயர் கொண்ட அம்மனிதர்களோ, மிக்க கிழமாய் வாழ்ந்து அழிகின்ருர் முறைமை கேடாக (பார்ப்பென்பது குழந்தைப் பெயர்)

பஞ்சனைப் பறந்தேகும் வாசியைச் சிதைவின்றிக் கதிர்முனை என்னுஞ் சுழிமுனையிற் பலமுற்றழியா

வண்ணஞ் செய்வாரே நூலோர் பிரமமாணவர் என்னும் பிராமணர் ஆம். வாசியைப் பஞ்செனப் பறக்கவிட்டோர் பஞ்சைகளே. பார்ப்பின் றன்மை யடைந்தோரே பார்ப்பார் ஆம். மூப்பிளமை யின்றிப் பேசுந் தன்மையாற் பார்ப்பாராகார்.

அழிந்து கெடுகின் றனர்சைவப் பேரோ ரதிகொலைசெய்
தழித்துத்தன் னுன்மாவைச் சூத்திரப் பேரோ
[ரவரிடத்து
மொழியுநற் சூத்திர மில்லை கிறீஸ்தவர் முன்னுரைத்த
அழியாத தேவனன் நாம மெதுவென் றறிகிலரே. (300)

அழிவும் கேடும் உடையோர் ஆகின்றனர் சைவர் எனப்பெயர் வைத்துக் கொண்டிருப்பவர்கள். எப்படி எனின், உயிராய் நின்றிலங்கும் வாசியைப் பாழ்போகும் படி, அழிவுறும்படி செய்தலால்க் கொலை செய்பவராகின் றனர். அவ்வுயிரைக் காப்பவரே சைவர் ஆம். இதனை முயல்வனபத்து வகை என்னு இயமம் பத்துவகையில், கேடுசெய்யலை ஒழித்துச் செம்மையடைந்து தவமுடை யோனுதல் எனக்கூறிய வகையால் உணர்க. சூத்திரர் எனப்பெயர் கொள்பவரிடத்தினும், சொல்லப்பட்ட அச் சூத்திரம் இல்லை. சூத்திரம் என்பது முன்கூறிய நூலே யாம். சூத்திரர் என்பதும் நூலோர் என்பதும் ஒரு பொருளேயாம். கிறிஸ்தவர்கள், முன்பு சொல்லியதான அழிவற்ற தேவன் நாமம் எது என்பதையும் அறியாத வராயினர்.

அறிகிலர் நற்பரிசுத்தமாம் ஆவி யதுநபிமுன்
னறி வித்த நேர்யெதி ராம்மறை யீதென் றறிதலற்று
முறையெதி ரான தவறுகள் செய்து முகம்மதியர்
நிறையற் றனருல கோரிவ் விதமென் னியாயமென்னே.
(301)

அறிய முடியவில்லை பரிசுத்த ஆவி எனச் சொல்லிய தையும் நபி முன்பு சொல்லிய எதிர் வேதம் இன்னதென வறியாது நீதிக்கெதிரான பிழைபாடுகளைச் செய்து முகம் மதியர்கள் ஒழுங்கு கெட்டார்கள் உலகோர்கள் இவ்வித மாயது என்ன, நீதிதான் என்னவோ.

என்னே மயங்கி யுழன்றூர் புராண மிசைத்ததெலா
மென்ன நமது சரித்திர மன்றே விதையறியா
தென்னென்ன வோநாத் திகர்நாத் திகங்க ளியம்புகிறு
ரென்னல மும்பெறச் செய்யநா தாக்க ளிருக்கவுமே. (302)

என்ன அறியாமையில் சிக்கித் திணறினர்கள். புராணஞ் சொல்லிய தெல்லாம் என்ன நமது சரித்திரமே யல்லவா இவ்வகையறியாமல் என்னென்னமோ நாத்திகர் களெல்லாங் கூடி நாத்திகம் பேசுகிறுர்களே என்ன இது எல்லா நலமுமடையச் செய்யவல்ல சித்தர்கள் எல்லோரும் இருக்கும்போது.

இருக்கத் திருமூல ரெண்ணு யிரமொ டிசைத்ததெலா
மிருக்கவுங் கொங்கணர் முக்காண்டம் போக ரியற்றியநல்
லருமை நிகண்டுந் திருவள் ளுவர்சொல்லு மாகமும்
பெருமை மிகவா மகத்தியர் தேரர் பெருமறையே
(303)

இருக்கின்றதே திருமூலர் ஆக்கிய எண்ணுயிர முதலிய நூற்களெல்லாம், இன்னும் கொங்கணர் முக்காண்டம் போக முனிவரால் ஆக்கிய நிகண்டு திருவள்ளுவர் ஆக்கிய ஆகமாதிகள் மேன்மை மிக்க அகத்தியர் தேரர் ஆக்கிய மறை நூற்கள்,

மறைநூற்க ளெல்லா மிருக்கக்கோ டாகோடி மாமுனிவர்
முறையே யியற்றிய தெல்லா மிருக்கநாம் மோசமுரு
திறைவ ளருள்பெற்றவனே நாமாகி யிருந்திடற்குக்
கறையின்றி யிந்நூ லுரைத்தனம் நல்ல கதியுறவே.
(304)

வேத நூல்கள் எல்லாம் இருக்கிறது. கோடாகோடி மகாமுனிவர் முறையோடு செய்தது எல்லாம் இருக்கிறது. இப்படி யிருந்தும் நாம் மோசம் போய்விடாமல் இறைவன் அருள்பெற்று அவனே நாம் ஆகியிருத்தற்காக மாசில்லாது இந்நூற் சொன்னேம் நற்கதியடையும் படியாக.

வேண்டு நலமெலாம் யீயுஞ் சித்தாதிகள் மெய்யுணர்வு
தூண்டும் படியுரை செய்நூ லுணர்ந்ததன் சூட்சமறிந்
தாண்டவ னென்குரு நாத னருளா லனுபவித்த
தீண்டுரை செய்தன மெல்லோரும் வாழ்க விசையுடனே.
(305)

வேண்டியநலம் எல்லாமுந் தருஞ் சித்தர்களால் உண்மையறிவைத் தூண்டும் வண்ணஞ் செய்த நூலே யறிந்து அதன் சூட்சத்தை யறிந்து என்னையாட் கொண்ட குருநாதன் அருளால் அனுபவித்ததையே யிங்கு சொன்னோம் எல்லோரும் புகழ்பெற்று வாழும் படியாக.

இசையுடன் வாழ்கவிந் நாலுணர்ந் தோரெலா மென்று [மென்றுந்
திசைகளெல் லாமுஞ் சித்தர் சமுகஞ் சிறப்புறப்பூ
மிசையுளோர் யாருமிந் நாநயந் தேர்ந்தென்று [மேன்மையுற
விசைவித்தேன் ஷண்முக நாத னிதுநா லினிதுமுற்றே.
(306)

புகழ்பெற்று வாழ்க இந்த நூலையுணர்ந்தவர்கள் எல்லாம் என்றென்றும் எல்லாத் திசைகளிலுஞ் சித்தர் குழாஞ் சிறப்பையடைய உலகிலுள்ளோர் யாவரும் இந்த நூல் உயர்வை யறிந்து தெளிந்து மேன்மையடையப் புகன்றேன். ஷண்முகநாதன் இதுநூல் இனிது முடிந்தது.

உயிர் நிலைக்கலை இலக்கண மென்னும்

மீனுமிர்தம்

முற்றிற்று.

பரிபாஷை விளக்கம்

அகிலம்	தாலப் பாசாணம்
அசுவகெந்தி	அமுக்குரா
அடவிக்கொள்	காட்டுக்கொள்
அடுக்கல் மல்லிகை	மலைமல்லிகை
அண்டம்	முட்டை
அத்தமாஞ்சாரம்	ஏகம்பச்சாரம்
அமுதின்குளம்	சீந்திற்சருக்கரை
அயம்	இரும்பு
அயப்பகை	அஞ்சணபாசாணம்
அரத்தப்பேர் மல்லிகை	பவளமல்லிகை
அரவுப்பேர் மல்லிகை	நாகமல்லிகை
அரனார் துளசி	சிவ துளசி
அரிக்காய்ப்பொருள்	அரிக்கீரை
அருக்கு	எருக்கு
அருணன் கரந்தை	சூரிய கரந்தை
அல்நெய்தல்	கருநெய்தல்
அவுரியிரண்டு	அவுரி, கருப்பவுரி
அளக்கர்த்துளசி	கடற்றுளசி
ஆடகம்	பொன்
ஆடுஉவரிவைதுடரி	ஆண் துடரி, பெண் துடரி
ஆதிமகிபன்	வீரம்
ஆமிலம்	புளிப்பு
ஆரம்	சந்தனம்
இபமாம்நெருஞ்சில்	யானை நெருஞ்சில்
இப்பாரின் நாதம்	பூநீர்
இப்பார் மதுரக்கிழங்கு	பூமிச்சர்க்கரைக் கிழங்கு
இரண்யம்	பொன்
இரண்டு கண்டங்கத்திரி	வெள்ளை சிவப்பு நிற (முள்ள கண்டங்கத்திரி
இரண்டு இருளி	பாலிருளி, இருளி

இரண்டுவகை ஆனி	சிறுதேட்கொடுக்கு பெருந் (தேட் கொடுக்கு
இரத்தவர்ணச்சாந்தம்	செஞ்சந்தனம்
இருகாக்கணம்	கருங்காக்கணம் வெண்காக் (கணம்
இளநங்கை	சிறியாணங்கை
இறைமல்லிகை	சிறுமல்லிகை
இனிமை	இரசம்
ஈரவருக்கை	ஈரப்பலா
உட்குந்தும்பை	கவிழ்தும்பை
உதரப்பேர்த்துத்தி	வயிற்றுத்துத்தி
உத்தாமணி	வேலிப்பருத்தி
உயர்நிலத்தோர்புல்	சுரப்புல்
உரு	அட்டை
உவரியின்பாசி	கடற்பாசி
உலகுப் பெயர்ப்பனை	நிலப்பனை
ஊரவரை	நகரவரை
ஊறல்மிகும்பொன்	பித்தளை
எட்கொட்டைக் கரந்தை	சிறுகொட்டைக் கரந்தை
எவச்சி	எவச்சாரம்
ஏரண்டம்	ஆமணக்கு
ஏமம்பர்	பொன்னம்பர்
இராகக்கிழுவை	செங்கிழுவை
ஒட்டுமிரி	சிற்றுமிரி
ஒன்றிரண்டுவங்கம்	மூவங்கம், கருவங்கம், வெள் [வங்கம், வங்ரம்
ஓதிமம்	பறவை
கஞ்சம்	வெண்கலம்
கடற்கப்பல்	நவச்சாரம்
கடு	முள்
கடுவருக்கை	முட்பலா

கடிக்கடலை	பேய்க்கடலை
கந்தக் கரந்தை	நாறுகரந்தை
கந்தக் குருந்து	சந்தனக்குருந்து
கபித்தம்	விளா
கரமுள்ளி	கழுதைமுள்ளி
கரிக்கலிளி	யானைத்திப்பிலி
கரும்பொன்னிரண்டு	இரும்பு, உருக்கு
கருப்போதிமம்	காகபாசாணம்
கல்நாதம்	அன்னபேதி
கல்லூறி இரண்டு	சிறுகல்லூறிபெருங்கல்லூறி
காயத்தரு	பெருங்காய மரம்
காயாரை	வறலாரை
காயம்	மிளகு
காய்சூருமிரி	காட்டுமிரி
காம்பு	மூங்கில்
காய்ப்பொருள்	கீரை
காரான் பெயர் முன்னை	எருமை முன்னை
காளம்	எட்டி
கார்க்கடலை	கருப்புக்கடலை.
கார்ப்பாசம்	பருத்தி
கான்சிரம்	காட்டுச்சீரகம்
கிஞ்சுகக் கதிரம்	செங்கருங்காலி
கிஞ்சுக்கார்ப்பாசம்	செம்பருத்தி
கிடை	நெட்டி
கிரந்திகேள்வன்	கிரந்தி நாயகம்
கிரிமுருக்கு	மலைமுருக்கு
குக்கற்றுளசி	நாய்த்துளசி
குசைப்புல்	தருப்பைப்புல்
குவட்டாமணக்கு	மலையாமணக்கு
குருகாம் எருக்கு	வெள்ளெருக்கு
குருகாம் அலரி	வெள்ளலரி

குமிழ் மூன்று	நீர்க்குமிழ் நிலக்குமிழ் பெருங்குமிழ்
குழற் பாசி	மயிர்ப்பாசி
குன்றத்துளசி	மலைத்துளசி
கொடிப்பாலை	காக்கைப்பாலை
கொடியாம் சிலைக்கல்	காகசிலைக்கல்
கோகுப்பாவட்டை	கழுதைப்பாவட்டை
கோதுக் கரும்பு	பேய்க்கரும்பு
கோலம்	பாக்கு
கோலி	இலந்தை
கோள்நிறக்குந்தண்டு	பவளம்
கோள்த்துளசி	கருந்துளசி
சசிவல்லி	கற்பூரவல்லி
சதகுப்பை இரண்டு	சதகுப்பை, காட்டுச் சத (குப்பை
சத்தத்த கட்டரவு	ஏழிலைப் புன்னை
சருமம்	தோல்
சவத் தேற்று	பேய்த் தேற்று
சர்ப்பமாந்தாளி	நாகதாளி
சிங்கியென்னும் பாலை	விடப்பாலை
சித்தன்னப்புள்ளடி	சிறுசெருப்படி
சித்திரமூலம்	கொடிவேலி
சிலம்பாமலரி	மலையலரி
சிலை	மலை
சிலைக்கால்	முடவாட்டுக்கால்
சிலைநாரி	மாகாளிக்கிழங்கு
சிவப்பாமலரி	செவ்வலரி
சீதமரம்	அருள்மரம்
சீலமாம்நாரி	நன்னாரி
சுதர்கட்கணையாம் கரந்தை	கொட்டைக் கரந்தை
சுரத்தின் நரந்தம்	காட்டு நாத்தைத

சுரர் கோமான்	இந்திர பாசாணம்
செக்கற்றிராய்	செந்திராய்
செங்கள்ளி	செங்கற்றுழை
செம்பொன்	தங்கம்
சேதாம்பல்	செவ்வாம்பல்
சேவண்ணச்சிங்கி	இரத்தசிங்கி
சேவண்ணவாமணக்கு	செவ்வாமணக்கு
சோதிமுறுவல்	தீமுறுவல்
ஞாணி	கோழி
தணக்கு	மஞ்சணத்தி
தந்தி எலுமிச்சை	யானை எலுமிச்சை
தரளம	முத்து
தலைசூடுவல்லி	தலைசுருளி
தலைவாங்கி	தலை திருகிமரம்
தவளம்	வெள்ளைப்பாணம்
தஙலிமூலம்	சித்திரமூலம்
தன்னமல் குருஞ்சா	சிறுகுருஞ்சா
தாட்கருவிப் பேர்க்கீரை	கோழிக்கீரை
தாவக்கல்	கானகக்கல்
திகிரிமதுகம்	மலையிலுப்பை
துருக்க மரம்	குங்கும மரம்
துறையுமிரி	ஆற்றுமிரி
தூபதிபத்தரு	சாம்பிராணிமரம், சூடன் [மரம்
தூய்கதிரம்	வெண்கருங்காலி
தோகத்துளசி	சிறுதுளசி
தோடமாங்கும்மட்டி	பேய்க்குமட்டி
நதிமுள்ளி	ஆற்றுமுள்ளி
நந்து	சங்கு
நரர்	மனிதர்
நறுமணமாம் பூரம்	பச்சைக் கற்பூரம்

நன்காம் வேளை	தைவேளை
நாறும்பொன்வெற்பு	பித்தளைமலை
நான எலுமிச்சை	கஸ்தூரி எலுமிச்சை
நிசி	மஞ்சள்
நிம்பப்பாசி	வேப்பம்பாசி
நீர்வாள்முத்து	நீர்வெட்டிமுத்து
பச்சைமுகில்	கார்முகில்
படுப்புடலை	கொத்துப்புடலை
பட்சியரசன்கல்	கருடப்பட்சிக்கல்
பதலைப்பேரத்தி	மலையத்தி
பத்தியச்சுமனசம்	கடுக்காய்ப்பூ
பரங்கித்தாழை	அண்ணாசி
பன்னக அணையோன் கரந்தை	விட்ணு கரந்தை
பாதிரி இரண்டு	பாதிரி வெண்பாதிரி
பாலான ஆம்பல்	வெள்ளாம்பல்
பானல்	கருங்குவளை
புண்கீரை	பிளவைக்கீரை
புதன்காரை	மருக்காரை
புரவவாழை	காட்டுவாழை
புரவிப்பல்	குதிரைப்பல்
புவிவாகை	நிலவாகை
புள்	பறவை
புள்ளடி	செருப்படி
பூக்கடம்பு	நிலக்கடம்பு
பூமணப்போன் ஆமணக்கு	சூரியகாந்த ஆமணக்கு
பூமிக்கடலை	நிலக்கடலை
பூவானகாரை	பூங்காரை
பெண்ணாள் கறை	கெந்தகம்
பெற்றித்திராய்	பம்பந்திராய்
பேனப்பீர்க்கு	நுரைப்பீர்க்கு
பைம்பொற்சிலை	தங்கமலை

பைவட்டு	பச்சைவட்டு
பொச்சையாம் ஊமத்து	மலையூமத்து
பொச்சை மதம்	சிலாமத பாசாணம்
பொட்டிலுப்பு	வெடியுப்பு
பொருட்பேருரோகணி	பீதரோகணி
பொலிவாம்மலர்க்கொன்றை	செழுமலர்க் கொன்றை
பொற்சிங்கி	ஏமசிங்கி
பொன்னி	தாளகம் அரிதாரம்
மகாபத்திரி	கருங்கஞ்சா
மச்சகளா	சொத்தைகளா
மடுப்பாலை	குளப்பாலை
மடைக்கள்ளி	சோற்றுக்கள்ளி
மண்கலம்	ஓடு
மண்டூகக்கல்	தவளைக்கல்
மதுகம்	அதிமதுரம்
மதுரமிகவாங் கோவை	தித்திப்புக் கோவை
மதுரவல்லி	சர்க்கரைவல்லி
மலைநார்	கல்நார்
மா	விலங்கு
மாத்தும்பை	பெருந்தும்பை
மாமலி	பேராமல்லி
மாமல்லிகை	பெருமல்லிகை
மாய்மாம்வல்லி	கருங்கொடி
மாரிமிட்டான்	தண்ணீர் மிட்டான்
மாரியாம்பூலா	நீர்ப்பூலா
மால்வாகை	கருவாகை
மாவாகை	பெருவாகை
மாவாரை	பொறியாரை
மிறைமல்லிகை	சிறுமல்லிகை
மிறைநாவல்	சிறுநாவல்
முச்சுடர்	சூரியன், சந்திரன், அக்கினி

முட்டி இரண்டு	சிற்றுமுட்டி, பேராமுட்டி
முடிகக்காதுக்கீரை	எலிச்செவிக்கீரை
மூத்தநங்கை	பெரியாள் நங்கை
மேதினி உகா	நிலவுகா
மேலோர் முருங்கை	தவசி முருங்கை
மேனிலையோர் தாளி	தேவதாளி
மைசாட்சி	குக்கில்
மையின்றுழை	கடற்றுழை
மோத்தைச் செவிமருது	ஆட்டுச் செவிமருது
மௌவலதன்பேதம்	முல்லைப்பேதம்
யட்டிமதுகம்	அதிமதுரம்
ரெண்டுதெல்லு	யானைத்தெல்லு குருந் [தெல்லு
வசைப்புழு	துர்க்கிருமி
வணமான கோபம்	இந்திரகோபம்
வண்டு	சங்கு
வண்மையாம் ஆரை	வல்லாரை
வல்லி எலுமிச்சை	கொடி எலுமிச்சை
வல்லியாம் பாலை	கொடிப்பாலை
வழை	புன்னை
வாயினிக்கும் வேம்பு	சர்க்கரை வேம்பு
வாலாங் கிலுகிலுப்பை	வெண் கிலுகிலுப்பை
வாலேயப்பேர்த்துத்தி	கழுதைத்துத்தி
வாலேயப்பேர்த்தும்பை	கழுதைத்தும்பை
வால்க்கரும்பு	வெள்ளா கரும்பு
வால்ச் சிவந்தி	வெள்ளைச்செவ்வந்தி
வாரிநுரை	கடல் நுரை
விடககுசசிலை	மாங்கிஷச சிலைக்கல்
விலங்கு	மிருகம்
வெள்ளமாம்பாலை	சமுத்திரப்பாலை

வெள்ளைப்புளி	கொறுக்காப்புளி (கொடிக்காப்புளி)
வெய்ய ரோகணி	கடுகு ரோகணி
வெறி நீர்	வாசனை நீர்
வேங்கையுகிரந்தப் பெயர்க்கொன்றை	புலிநகக்கொன்றை
வேணவரை	வாளவரை
வேட்டுவன்	குளவி
வேர்க்கொம்பு வாசனையாம்புல்	சுக்குநாறிப்புல்

உ
சிவமயம்

அருமருந்துக் கோவை

மூலமும் உரையும்

உலகி லுயிரின மோங்கநா தாக்க ளுரைத்தவுயர்
நலமா மருமருந் தைக் கோவை செய்துரை நாமுரைக்கத்
தலங்களி ராறி லுயிர்நிலைத் தோங்குந் தகவருளும்
நிலயமா மூல கணபதி தாளிணை நேருவமே.

இந்து வர்ணமெழு குகந்த கத்தயில மிரும்பு சிந்தூரஞ்
(சாந்தமாஞ்
சந்தி ரோதய மணிய கத்தியர் தங்கு ழம்புவண சாரமாஞ்
சிந்து ரங்களிவை யாறி னுக்குமுறை செப்பு வோமிவை
(வையகத்
தெந்த நாளினுமி லங்க மேன்மையோ டினிது நாதனடி
(தொழுதுமே

அகத்தியர் கரிசில் 151-ல் சொல்லிய

இந்துவர்ணமெழுகு

விந்து விந்துசிந் தூர நாதமிகு வீர மோடுசிவ காமியும்
வெள்ளை சிங்கிநட் சத்தி ரம்பகரு வீறு மாண்குறியு
(மெட்டுபின்
தொந்த மானமுரு கன்பு ராணமரி தூப தீபமது
(சமனிடை
சுத்தியாவதிலே பாரு பாருபரி சுத்த மானகலு வத்திலே
சிந்தை கொண்டுபதி னன்கு மொன்றுபட சேர்த்த
(ரைத்துவிடு தூள்தாய்
சிக்கிரத்திலிரு நாத மாமத னைச்சேரு நாதகுரு தைலமே
முந்த விட்டுவரு சாம நாலுமரை போதுமாமெழு
(குழுந்ததாய

மோச மின்றிபனே வெல்ல் மாசுபெற வோங்கு பத்தியமு
(மில்லையே(1)

இல்லை யில்லைகப வாதசன்னிசுர மெட்டு காசமொடு
(குட்டமும்
ஏறு கின்றவிரை வாத சூலைரண மீளைதோஷ வட்ட
(குன்மமும்
சொல்லு கின்றதொரு மார டைப்பினொடு சூத கத்தொடு
(மகோதரம்
சோகை மஞ்சட்கா மாலை சத்தி வயிற் றுலைல போக்
(கொடு பவுந்திரம்
கல்ல டைப்புகுலை வலிகி ரந்திபுரை கண்ட மாலைசல
(தாரையிற்
கண்ட நீரிழிவு குத்த லானமுகிற் காசரோகமுத லானவும்
எல்லை விட்டெழு கடல்க டந்துபிணி என்ன பாடுபடு
(மறிகிலேன்
இந்து வர்ணமெழு கெந்த நாளுமுயி ரென்ன லாகுமிது
(வுண்மையே (2)

உண்மை யுண்மையதாயுரைத்த வுறுதிதன்னைப் பாரடா
வுற்றதோர் சரக்கு கட்கு முரியசுத்தி கேளதைத்
தன்மையாக இல்லை யென்று தாமுரைத்தோ முன்னமே
வண்மை தன்னை நீ யறிந்து வலிவு தள்ளி யுறுவதாய்
நன்மையாகச் சேர்த்தரைக்க நல்லசாத்திரங்களாய்
எண்ண மிட்டுக் கவலை கொள்ளா திம்மருந்து செய்து
(கொள்
கன்னமிட்ட கள்வர் போல எண்ணமிட்டுப் பற்றி நிற்கும்
வின்னப்பட்டு வியாதி யெல்லாம் மெய்யை விட்டு ஓடுமே.
(3)

ஓடுதற்குத் தாயைப் போற்றி யுன்னகத்திற் பூசைசெய்
வாடி டாதே யப்பனே மனதுளே பணிந்து கொள்

பாடு பெற்ற மெழுகுதன்னைப் பகரும் போது பத்தியம்
பகரு கின்ற கடுகு மஞ்சள் மச்சம் வற்றல் திலதநெய்
சாடு பிரம பத்திரம் சனியன் மாயை மதுவொடு
போதை நீக்கி நீயருத்தப் பிணிக ளாலுழன்றஆவி
கூடுவிட்டுப்போன சீவன் மீண்டு வந்துடல் புகும்
தோடணிந்த வீசர் பாதம் தொண்டுசெய்து கண்டு
(கொள். (4)

கண்டுகண்டு தேறுதற்கு ஆசான் வேண்டும்
பண்டுசெய்த நல்வினையு மீள வேண்டும்
பண்பான ராசியொடு கிரகம் வேண்டும்
தொண்டு செய்து பெரியோரைப் பணியவேண்டும்
துஷ்டருட நேசத்தை நீக்க வேண்டும்
வண்டு நிகர் குழன்மாது வாலாம்பிகைப் பெண்
வாஞ்சை யுற்று நீதவங்கள் பண்ணு பண்ணே. (5)

(உரை)

விந்து-இரசம், விந்துசெந்தூரம், இரசசெந்தூரம், நாதம், கெந்தகம், மிகு வீரமோடு உயர்வாகிய வீரம், சிவ காமியும், அரிதாரம், வெள்ளை, வெள்ளைப் பாஷாணம, சிங்கி, மிருதார் சிங்கி, நட்சத்திரம், பூரம், பகர்வீ றுமாண் குறியும், சொல்லும் புகழ்மிக்க, சாதிலிங்கம், எட்டுபின், அபின், தொந்தமான முருகன் புராணம், இழுக்குந் தன்மையுள்ளதாகிய, காந்தம், அரி, துரிசி, தூபம், சாம்பிராணி, தீபம், சூடன், அது சமனிடை, எல்லாம் ஒரே நிறை. சுத்தியாவது இல்லை பாரு, சுத்தியாவ தாகிய சரக்குகளையும், அது இல்லாது சேர்க்குஞ் சரக்கு களையும் பார்க்கவும். பாரு பரிசுத்தமான கலுவத்திலே, பார்த்து மிகவும் சுத்தமாகிய கல்வத்தில், சிந்தைகொண்டு பதினைன்கு மொன்றுபட சேர்த்தரைத்து எடுதூளாய், மனத்துள் மேற்கூறியவைகளை நன்ருயறிந்து கொண்டு, பதினைன்கு மருந்துப் பொருள்களும் ஒன்றுபட்டுச் சேரும் படி, அரைத்துத் தூளாக்கி எடுக்கவும். சீக்கிரத்திலிரு நாத மாமதனைச் சேரு, சீக்கிரம் என்பது வேகம், அது

வேருந்தன்மையுள்ள காரத்திற்கும் பெயராம், காரம், என்பது, கோழிமுட்டை. ஆகையால் சிக்கிரத்திலிருக்கும் நாதம் என்பது, கோழி முட்டையிலிருக்கும் மஞ்சட்கரு. மாமதனைச் சேரு, மா, பெருமை மிக்க, மதன், பச்சைக் கற்பூரம், சேருநாத குருதைலமே. கோழி முட்டையின் நாதமாகிய மஞ்சட் கருவுடன் மகா குருவென்னும் பெயரையுடைய பச்சைக் கற்பூரத்தையுங் கூட்டித் தைல மாக்கலால் நாதகுரு தைலம் எனப் பெயராம். (இதையே) முந்தவிட்டுவரு சாம நாலு மரை போது ஆம் மெழுகு, முன் கூறிய மருந்துப் பொருள்த் தூளில் விட்டு நான்கு சாமம்வரை அரைக்கவும். மெழுகாக ஆகும். உழுந்ததாய் உழுந்தளவு மோசமின்றிப் பனை வெல்லம், மாறு பாடின்றிப் பனை வெல்லம், (உழுந்தளவு மெழுகை பனை வெல்லத்திலுண்ண) ஆசுபெற ஒங்கு பத்தியமும் இல்லையே. வெறுப்புத் தரும் பெரிய பத்தியம் எதுவும் இதற்கு வேண்டுவதில்லை

சிவகாமி என்பது கெளரி. கெளரி, என்று அரி தாரத்திற்கும் பெயர் உண்டு, ஆகையால் அது அரி தாரமே.

இதனைற்றிரும் நோய்வகைகளும் பத்திய பாகமும் சொல்லிய செய்யுள், வெள்ளிடை.

கருவூரார் வாதநொண்டி 751-ல் சொல்லிய

கந்தகத் தைலம்

அந்தமுள்ள கந்தகத்தின் றயிலம்
அரைகின்றேன் திருமூலர் கொங்கணரும் மெய்க்க
கெந்தகந்தான் மாசிலாதாகக்
கெடியாக ஐந்துபலங் கல்வத்திலிட்டுச்
சாரமுடன் வீரமிரு காசு
சமரில் வெடி யுப்புபல மரையும்
தாளக மிலிங்கமுடன் ரெண்டுஞ்
சமமாக வேமூன்று காசிடை கூட்டி
அரையப்பா ஆவெண்ணெய் கொண்டு
அருமையா கியவெள்ளைச் சீலையிலூட்டி

மேல்புடம் மெதுவாக வதனை
மெத்தெனவே பாகமுடன் வைத்திடவே தைலம்
தந்திர மாயிறக்கிடுவாய் அதைச்
சந்தோஷ மாயெடுத்து விந்தையுடனே
பணவெடை சர்க்கரையிலும் கற்கண்டிலும்
பண்புடனே காலைமாலை யுண்டுவரத்
தீரும் வியாதிசொல்வேன் பின்னுந்
தீராத க்ஷயரோக மீளைகுன்மம்
குஷ்டமொடு கொடுமை வெள்ளை
கொடிதான மேகமொடு வாய்வுவாதம்
ஒருமண்டலங் கொளவே தீரும்
உத்தம வயித்தியற்கு இந்தமுறை
வாய்த்துதென் றுலதுவும் ராச
வயித்திய னனென்றே பேரும் பெறுவான்
சத்தியமாய்ப் பத்தியமில்லை இந்தமுறை
சண்டாளற் கொருபோதும் கிட்டாது
கற்பசித் துடனேதான் ஆகாய
கவனமும் பாய்வான் கண்ணின் முன்னே
மாசில்லாத் தைலமிது சித்தர்
மறைப்பாகப் பாடிவைத்தார் தெரியாமலே
வெளியாகச் சொல்லிவிட்டேன் இந்த
மேதினி னுள்ளவருங் கியாதிபெறவே
தெளிவொடு தெரிந்துகொண்டு தயிலம்
செய்துகொள் வாய்மாந்த ருய்துகொள்ளவே
என்குரு போக நாதர் பாதம்
இனிமையுடன் பணிந்து கனிவு பெற்று
தன்மை யுடனேதான் இந்தச்
சாத்திரத்தி லுள்ளபடி நேர்த்தியுடனே

(இதன்பொருள் வெள்ளிடை)

அயச் சிந்துரம், அகஸ்தியர் கரிசில் 151

கரியலோகந் தயிரியம் கான்த சாங்கமுடன்
அரியசிந் தூர மறிகுகனி - கரியுலகு
பலமொன்று மீனட்சி பட்சமுள மைந்தனென்று
கருகுமரி நீராற் கரை.

(உரை) கரிய லோகம்-இரும்பு, தைரியதசாங்கம் தைரியம்-வீரம், தச-பத்து, அங்கம்- எலும்பு, முழு எலும்பு, கங்காளம்-கங்காளன் என்னும் பெயர். அரன்-ஆக இவற்றைக் கூட்ட, வில்லி என்னும் பெயரையுடைய வீரபத்தரன் என்ருகும்-வீரபத்தரன் பெயர், வில்லி-வில்லி, மனேசிலே-அரியசிந்தூரம் திலகம் இடுதற்கரிய சிந்துரம், யானே-யானேக்குத் தந்தி என்றும் பெயர், தந்தி-கந்தகம், அறிகுகனி-எலுமிச்சங் கனி, அதின் பெயர், அருணம், அது சூரியனுக்கும் பெயர் சூரியனுக்குச் சண்டன் என்றும் பெயர். சண்டன் என்பது லிங்கம், கரியுலகு, கரி-யானே, அதற்கு நாகம் என்றும் பெயர், நாகலோகத்திற்கு பவனம் என்று பெயர். பவனம் என்பது வெள்ளேப் பாஷாணம், பலமொன்று, வகைக்குப் பலம் ஒன்று, மீனுட்சி பட்சமுள்ள மைந்தன். வீரன்-வீரம், ஒன்று ஒரு பலம், கருகுமரி நீராற் கரை கருப்புச் சோற்றுக் கற்ருழை நீரால்க் கரையும்படியாகச் செய்து.

(கருத்துரை) அயம், மனேசிலே, கந்தகம், இலிங்கம், வெள்ளேப் பாஷாணம் வீரம் வகைக்கொரு பலமாக எடுத்துக் கொண்டு கருப்புக் கற்ருழைச் சாறுவிட்டுக் கரையும்படியாய் அரைக்கவும்.

கரையவரைத் தோவியிற் காய்ந்து கண்சட்டிதனில்
முரையாய்ப் புகையடங்க முன்வறுத்து-வறவரைத்து
எடுக்கச் சிந்தூரமா மிதைப்பூசித் தினிக்கேள்
கொடு கடுகு திரிபலாதி கொள்.

(பொழிப்புரை)

நன்ருய்க் கரையும்.படியாக அரைத்து வெய்யிலிற் காயவைத்து யானேக்கண் சட்டி என்னும் தளவாய்ச் சட்டியில் முறையோடு புகைச்சல் அடங்கும் படியாக வறுத்து எடுத்துக்கொண்டு பின்னர் கல்வத்திலிட்டு அரைத்து எடுக்கச் செந்தூரமாகும் வைரவர் பூசை செய்து வைத்துக்கொள்ளவும் இனிமேல் செய்ய வேண்டியது கேட்கில், சுக்கு, மிளகு, திப்பிலி, கடுக்காய்த் தோடு, நெல்லி வற்றல் தோடு, தான்றிக்காய்த்தோடு,

கொள்வால் மிளகொடு ரோகணி தந்தி
வில்வாய் அதிமதுரம் விரடைவகை - அள்ளிடித்து
சூரணத்திற் கோகனிச்சார் சூட்டியரை யொருநாள்
காரணசெந் தூரங் கல

வால்மிளகு, கடுகுரோகணி, நேர்வாளம், (சுத்தி செய்தது) அதிமதுரம். இவைகள் எல்லாம் சம எடையாகச் சேர்த்து இடித்து எடுத்து அச்சூரணத்தில் எலுமிச்சம்பழச்சாறு விட்டு ஒருநாள் முழுதும் அரைக்கவும் மேற்கூறிய செந்தூரங் கலக்க-

கலக்கு முறைகேள் கனமுள சூரணம்பத்து
கலசெந்தூ ரம்மொன்று கலந்தரைத்து - நிலைபூசித்
துலகில்பல வாயுமுடல் விசபாண்டு குன்மம்
குலைகுலைந்து போம்பார் குணம்.

கலக்கும் அம்முறையாவது உயர்வாகிய இச்சூர்ணம் பத்துப்பங்கு எடையும் அயச்சிந்துரம் ஒரு எடையுமாகக் கலந்து ஒன்றும்படி நன்றுயரைத்து முறையாய் வாலையையும் வடுகனையும் பூசை செய்து மக்களுக்கு உண்டாம் பல வகைப்பட்ட வாய்வுகளுக்கும் விசபாக விக்கத்திற்கும் கொடுக்க அவ்வியாதிகள் நிலைகுலைந்து போய்க் குணமுண்டாகும்.

குணமாம் பத்தியமில்லை கூசாமற் பிணிக்குண்ணக்
குணமாய் மலசலநோய் கூடகலும் - பணவெடைதேன்
கூட்டியுண்ண ரத்தவிர்த்தி கூடுந்தா தும்பலமாம்
நாட்டிமண் டலமுண் நறை.

குணமாகும் பத்தியமும் இல்லை கூசாமல் நோய்கள் நீங்கச் சாப்பிடலாம் மலசலக்கட்டா லுண்டாம் நோய்கள் அடியோடு ஒழியும் பணவெடையளவு (சூரணங் கலந்த இச்செந்தூரத்தை) தேன்விட்டு மத்தித்துச் சாப்பிட இரத்த விருத்தியுண்டாம் தாதுபலமும் கூடும். ஒரு மண்டலம் சாப்பிட.

நறையாவும் வாராது நற்றேகந்தான் கனகம்
முறையிருநே ரமுமுண்டு முனையில்வரத் - திரையகன்று
மால்மகனய் வாழ்வான் மாட்சிமையா யிவ்வுலகில்
கால் பலமாம் போகமுண்டு காண்.

நறையணுகாது உடம்பு பொன்போலாம் முறையாக இரண்டு நேரமும் சாப்பிட்டு சுழிமுனை நாடியிற் செல்ல உடம்பிற்றிரையும் மாறும் மன்மதன் போன்று நல்வாழ்க்கையுண்டாகும் இளமைப்பலமும் போகமும் உண்டாம்.

இதுவும் அகஸ்தியர் கரிசில் 151

சாந்த சந்திரோதயக் குளிகை

காந்தரப்பகை பொறி பூரந் தொடை யெடை யாதி
சாந்த மொன்றது அரையது மூன்றதுவது சம்பீரம்
தேர்ந்தரைத் திடுமணியென மணியள விதனமஞ்
சாந்த சந்திரோதமிது வழல் நோய் தரியாதே.

காந்தரப்பகை - பூமிப்பகை, அது வெள்ளைப் பாசாணம், பொறி - இலக்குமி, அது தாளகம், பூரம், இரச கற்பூரம்' தொடை - நாண் அதற்கு தந்தி, என்றும் பெயர். தந்தி என்பது நேர்வாளம். எடை ஆதி சாந்தம் ஒன்று வெள்ளைப் பாசாணம், தாளகம், ஒரு எடை அது அரை. ரச கற்பூரம், அரை எடை, மூன்றதுவது, மூன்றுங்கண்ட எடை, நேர்வாளம் (நன்ருய்ச் சுத்தி செய்தது) சம்பீரந் தேர்ந்தரைத்திடு. எலுமிச்சம் பழச்சாறுவிட்டு, (மேற் கூறிய சரக்குகளை நன்ருய்ச் சுத்தி செய்து) சேர்த்து மணியென மணியளவாகும். அரைத்து மாத்திரை யுருட்டக் கூடிய பதத்தில் குன்றி மணியளவு ஆக உருட்டி வைத்துக் கொள்ளவும். இதனைஞ்சாந்த சந்திரோதயம். இதன் பெயர் சாந்த சத்திரோதயம் ஆம். அழல் நோய் தரியாதே. சுரநோய்கள் எதுவும் நில்லாது ஓடும்.

அகஸ்தியர் குழம்பு

அமுத கலைக்ஞானம் 1200

உண்மையாய் நம்முடைய குழம்பைக்கேளு
உறுதியுள்ள பெருங்காய மிந்துப்போடு

தன்மையுள்ள கடுகு ரோகணியுங் கூட்டித்
தயவான ரசமுடனே காரங்கூட்டி
நன்மையுள்ள நிர்விஷமுஞ் சிலையுந்தாரம்
நல்லகருஞ் சீரகந்திப் பிலியுஞ் சேர்த்து
வன்மையுடன் றுகை பார்க்பபத்து மாச்சு
வரிசையுடன் சரியெடையாய் வாங்கிக் கொள்ளே. (1)

வாங்கியதோர் மருந்துக்கு யிடைதான் வாளம்
வளமாக அதுக்கரைதான் பச்சை சேர்த்துப்
பாங்குடனே கல்வத்தி லிட்டுக்கொண்டு
பக்குவமா யீராறு சாமமாட்டித்
தீங்கில்லா முப்பூவும் பத்துக்கொன்று
சேர்த்துநீ திறமாகச் சாமமாட்டு
சாங்கமுடன் மருந்தரைக்கும் போதில் மைந்தா
தயிருடனே சோறுண்டு தயவாயாட்டே (2)

ஆட்டி நன்ருய் வழித்தெடுத்து மேதிக்கொம்பு
அடைவான சிமிழதனிற் பதனம் பண்ணி
நாட்டிலே மானிடர்க்கு வருநோய்க் கெல்லாம்
நலமான அனுப்பான மறிந்து செய்தால்
வாட்டமுட னோடிவிடு மைந்தா கேளு
மகத்தான வித்தையடா குழம்பின் மார்க்கந்
தேட்டிலே யிக்குழம்பைத் தேடிக் கொண்டு
சிவசிவா நம்முடைய பேர்வைத் தாரே. (3)

பேர்வைத்த தாரென்ருல் மைந்தா கேளு
பெருமையுள்ள சித்தர்தபோ தனர்கள்கூடி
நேர்வைத்த மருந்துறுதி குறிப்பைக் கண்டு
நேர்மையுள்ள அகத்தீசர் குழம்பென் ருர்கள்
பார்வைத்த வகத்தீசர் பண்பறிந்தால் மைந்தா
பகரினதோர் குழம்புறுதி யறிவா னப்பா
கூர்வைத்த குழம்புறுதி யென்ன வென்ருற்
குணமான பச்சையடாவுயிரு மாச்சே (4)

உயிரான பச்சைதனை யறிந்து கொண்டு
உண்மையாய் நம்முடைய குழம்பைப் பண்ணி
பயிரான மானிடர்க்கு வருநோய்க் கெல்லாம்
பாய்ச்சுகின்ற விதமுனக்குப் பகருவேன்கேள்
துயரான லோகருக்குச் சுரங்கள் கண்டாற்
சுகமாக இஞ்சியைநீ சுரசம் பண்ணி
வயிரான குழம்பிற் காற் பணவெடைதான் கரைந்து
வரிசையாய்க் கொடுத்தவுடன் பேதியாமே. (5)

ஆமப்பா பேதித்த போதில் மைந்தா
அணுகி நின்ற சுரமனைத்து மகன்றுபோகுந்
தாமப்பா சோறுபொங்கி வெந்நீர் விட்டுத்
தாகமது தானடங்கக் குடிக்கச் சொல்லு
நாமப்பா சொல்லுகிறோம் பத்தியமில்லை
நன்மையில்லாத் தோசமது நாடிற்றுனல்
போமப்பா கடுகளவு கண்ணிற் போட்டுப்
புரிசமுடனு வினிலே தீற்றுவாயே. (6)

தீற்றி நன்றாய்க் கண்ணிலிட்டால் முழித்துப் பார்ப்பான்
திரமான நாவறட்சி விட்டுப் போகும்
பார்த்து நன்றாய்ப் பரிசுடனே பிணியறிந்து
பருவமுடன் செய்துவரப் பலனு மைந்தா
கார்த்து மிகக் கருவறிந்து குணத்தைக் கண்டு
காலறிந்து மேலறிந்து கர்மம் போக்கி
போற்றிநன்றாய் மருந்துமிகச் செய்தாயானால்ப்
பூலோக ராசரிசியாவாய் பாரே. (7)

பாரப்பா பிளவைமுத லேழு நோய்க்குப்
பண்பாக வுமிழ் நீரிற் குழைத்துப்பூசு
நேரப்பா வீரமெல்லாந் தீருந் தீரும்
நேர்மையுடன் புரை முதலாய் புண்கள் தீரும்

க்காரப்பா விஷமனைத்தும் போக வென்றால்க்
கடுகளவு கண்ணிலிடக் காணு தோடுஞ்
சாரப்பா விரியனுக்குச் சிறுபாகற் சாற்றில்த்
தன்மையுடன் நீகுழைத்துக் கண்ணிற்றீற்றே. (8)

திற்றியே கடிவாயிற் பூசிப்பாரு
செம்மையுடன் விஷந்தீருந் திரந்தானப்பா
போற்றியே சில்விஷங் களனைத்தும் போகப்
புகலுகிறேன் சிறுநீரைச் சிறுக வாங்கி
பார்த்துமே கடுகளவு கரைத்துக் கொண்டால்
பறக்குமடா சில்விஷங்க ளனைத்தும் மைந்தா
கார்த்துமே வயித்தியமா யிரத்தில் மைந்தா
கருவாக வயித்தியத்திற் கருதினேனே. (9)

(அரும்பதவுரை) நிர்விஷம், கருடக்கிழங்கு - (ஆகாயக் கருடக் கிழங்கு) மருந்துக்கு இடைதான் வாளம். எல்லா மருந்துப் பொருள்களின் பாதிநிறை. நேர்வாளம் (நன்ருய்ச் சுத்திசெய்தது) வளமாக அதுக் கரைதான் பச்சை சேர்த்து இவைகளெல்லாங் கூடிய நிறையிற் பாதி பச்சை சேர்க்கவும். பச்சை என்பது வாசலையின் பெயர். அதற்கு முருகு என்றும் பெயர். முருகு என்பது எலுமிச்சம்பழம் எலுமிச்சம்பழச் சாறு விட்டு அரைக்க வேண்டியது. (எலுமிச்சம்பழச் சாறு கூடுதலாகவே சேர்த்து அரைக்கலாம்) சிறுமல்லியளவு கொடுக்கலாம்.

அகஸ்தியர் கரிசல் (151)

சொர்ணசார சிந்தூரம்

கஞ்சூதம் ரெண்டும் வகையோர் பலமாகக்
கள்ள மிலாதுருக்கிக் கலந்திரண்டும் - நல்லகல்வம்
இட்டுவச் சிரச்சாறிழைக்கநவ நீதமுமாம்
வட்டுருட்டிப் பார்த்தலமபிலவை. (1)

வைபூரஞ் சூரன் மாசினஞ் சாரம்
நையாவுஞ் சேர நாட்டியரை - மைசிசா
சிலேபத்துச் செய்து சேர்த்தடைத்து வாய்திறந்து
வேலேசட்டி மீதுமணல் வேய்.

வேய்வாய்சி சாநடுவில் வேண்டியவை மணலேயிட்டு
ஆய்வாய் கழுத்தடிமண் ணுகவிட்டு - நேயமுடன்
சாமம்நா லும்மெரிக்கத் தங்கம்போல் மஞ்சள் வர்ணம்
ஏமசிந் தூரமெடு. (2)

எடுத்தெந்த நோய்க்கு மிடையூறிலாமற்
கொடுநெய்தேன் வெண்ணெய் குணமறிந்து - படு
[நோய்கள்
சொர்ணசா ரம்மென்று சொன்னுரென்குரு முருகன்
வர்ணசிந்துரமாம் வகை.

(பொழிப்புரை) நாகம் - இரசம் வகைக்கு ஒரு பலம் எடுத்துக் கொள்ளவும். (சுத்தி செய்த) நாகத்தை உருக்கி இரசத்தைத் தொந்தித்துக் கல்வத்திலிட்டு பிரண்டைச் சாறுவிட்டு அரைத்து உருட்டி நீரில் அலம்பி வைத்துக் கொள்ளவும். நாகரசங்கண்ட எடைக்குச் சரியாக பூரம், வீரம், சீனம், நவச்சாரம், கந்தகம், எல்லாம் கூட்டி காசிக்குப்பிக்குப் பத்துச் சீலேமண் செய்து காயவைத்து எடுத்துக் கொண்டு அதில் பாதி அளவு மேற்கூறிய மருந்தைப் போட்டு அக்குப்பியை வாயகன்ற சட்டியில் வைத்து குப்பியின் கழுத்தளவு வரை சட்டியில் மணலேக் கொட்டி குப்பி வாயை மூடி நான்கு சாமம் முறையே எரிக்கவும் தங்கம் போன்ற நிறமான சிந்தூரமாகும் எடுத்து வைத்துக் கொண்டு நோயின் குணந்தெரிந்து, நெய், தேன், வெண்ணெய், இவைகளிற் கொடுக்கவும், வியாதிகள் நீங்கும். இது முருகன் அகஸ்தியர்க்குச் சொல்லிய சொர்ணசார சிந்தூரமாம்.

அருமருந்துக் கோவை

மூலமும் உரையும்

முற்றிற்று.

★

பிழை திருத்தம்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
4	10	கூறிவிட்டு	கூறிட்டு
4	16	யுண்னும்	யுண்ணும்
18	20	காய்ச்சக்கெட்டு	காய்ச்சரக்கெட்டு
21	27	சரலாங்க	சாலாங்க
25	11	றின்னிப்பயறு	மின்னிப்பயறு
25	13	கௌடவிக்கொள்ளு	நற்கொளடவிக்கொள்ளு
26	3	சரன	சரள
26	19	வபரிதாங்	பெரிதாங்
28	14	கிறுகட்டுக்கொடி	சிறுகட்டுக்கொடி
30	8	புற்ருேணே	புற்சோணே
30	13	மறுக்குராய்	மறுக்குராப்
30	26	முள்ளவரை	முள்ளவவரை
30	32	மேலிலேபாம்	மேழிலேயாம்
31	15	தாங்கிளாவும்	தாங்களவும்
31	20	மன்றி	பன்றி
31	28	மிச்சிறிய	மீச்சிறிய
31	29	யுளிச்சிறிய	புளிச்சிறிய
32	3	தாடக்கருப்பேர்	தாட்கருவிப்பேர்
32	9	மல்லிகைகாள்	மல்லிகைகான்
32	14	மாலிகையு	மல்லிகையு
32	15	ஞேடிர்க்கு	ஞேடீர்க்கு
32	16	வல்லிச்சி	வல்லிசசி
32	20	வாலோய்	வாலேய
32	22	மாபுரவ	மாபுறவ
32	28	யெட்டுத்துத்தி	பெட்டித்துத்தி
42	15	பொருலே	பொருளே
44	1	செய்கறி	செய்கரி
49	2	நுரைத்திரனென்	நுரைத்திரளென்
50	1	நற்றவன	நற்றவள
57	22	திறைவளருள்	திறைவனருள்

உ

கபரோக வைரி

எவ்வளவு நாட்பட்ட கபரோகங்களையும் ஒரே வாரத்தில் நீக்கி பூரணகுணம் ஏற்படச் செய்கிறது. மருந்து சாப்பிட்ட நிமிஷ முதல் நோய் நிவர்த்தியாவதை அறியலாம். ஒரே நாளில் மூச்சு முட்டல், கஷ்ட சுவாசம், இளைப்பு மாறும். மருந்து சாப்பிட்ட பத்து நிமிஷத்தில் கபக்கட்டு வெளியேறும். மந்தாரகாசம், சுவாச காசம், ஈளை இருமல், அஸ்திசுரம், கபவாதசுரம் கபசுரம், உடம்பெரிவு முதலிய கபரோகங்களுக்கு நிகரற்ற மருந்து.

பாட்டில் விலை ரூ 15.

கிடைக்குமிடம் :

"வைத்தியமணி" சித. வே. ஷண்முகநாத பிள்ளை

தேவகோட்டை

செயின்ட் தெரிசா மெடிக்கல் ஹால்

ஜார்ஜ் 5, ரோடு, காரைக்குடி.

மீனாட்சி தர்ம சித்த வைத்தியசாலை

அருப்புக்கோட்டை ரோடு, மதுரை.

சிறந்த நூல்கள்

★

இலக்கியம்

காதற் பாட்டு
விறலிவிடு தூது

வைத்தியம்

உயிர்நிலைக்கலை
வைத்திய சாஸ்திரம்

தேசீயம்

டில்லி செங்கோட்டை
விசாரணை
பிரிட்டிஷாருக்கு எனது
வேண்டுகோள்

காந்தீயம்

காந்திய வழி
ரசமான சம்பவங்கள்

கவிதை

கவிதைக் கதம்பம்
கம்பன் பிள்ளைத் தமிழ்

நாடகம்

வானவில்
கமலா

★

இலக்கியப் பதிப்பகம்
காரைக்குடி.

நல்ல புத்தகங்கள்

மகாத்மா காந்தி வாழ்க்கையில் ரசமான சம்பவங்கள்

விலை ரூ 1—8—0

காந்தியத்தை விளக்கி கட்டுக் கட்டாக எழுதப் படும் புத்தகங்களைவிட இந்தச் சிறு சம்பவங்கள் அவருடைய தத்துவங்களை நன்கு விளக்குகின்றன. இதைப் படிக்கும்பொழுது மகாத்மாவுடன் நெருங் கிப் பழகும் உணர்ச்சி ஏற்படுகிறது.......
மொழிபெயர்ப்பு தெளிவாக இருக்கிறது. —தினமணி

ஆசிரியர்: ஜி. ராமச்சந்திரன் : :
தமிழாக்கம் டி. ஆர். அருணாசலம்

★

காந்திய வழி

விலை ரூ 2—12—0

பிறவழிகளில் உலகம் நாசத்தையே கண்டது; சுகத்தைக் காணவில்லை. அந்த ஆபத்திலிருந்து உலகம் விடுபட வேண்டுமானால் **காந்தியவழி** தான் அதற்குச் சரியானது. — தினசரி

ஆசிரியர் : ஆச்சாரியா கிருபளானி :
தமிழாக்கம் : கா. திரவியம்

★

காதற் பாட்டு

விலை ரூ 3—0—0

இந்நூல்........ஏற்ற ஒரு ஊன்றுகோல் போன்றது. தமிழ்அன்னையின் திருக்கோயிலுக்கு இதுபோன்ற பலவாயில்கள் திறக்கப்படல் வேண்டும்.
— அகில இந்திய ரேடியோ, திருச்சி

ஆசிரியர்: ராய. சொ.

இலக்கியப் பதிப்பகம், காரைக்குடி.

S. I P. Karaikudi.